## அத்தியாயம் 12

# ஐக்கியம் மற்றும் ஆவிக்குரிய வரங்கள்

அதிகாரம் 11ல், இரண்டு விஷயங்கள் - முக்காடிடுவது மற்றும் சமுதாய உணவின்போது பிரிவினைகள், இவ்விரெண்டும் பவுல் மற்றும் கொரிந்து சபைக்கு இடையே குழப்பத்தை உண்டு பண்ணின விஷயங்களாக இருந்தது. இரண்டு காரியங்களுமே "விக்கிரகத்திற்குப் படைத்ததற்கு" (8:1) மற்றும் சபை கூடும்போது சரியாக நடந்துகொள்வதற்கும் சம்பந்தப்பட்டிருந்தது.[1] ரோம தேவர்களை வணங்கினவர்களுக்கு முக்காடிடுவது பக்தியின் சின்னமாக இருந்தது, கிறிஸ்தவர்கள் தங்களையே வேறுபிரித்துக் கொள்ள வேண்டியிருந்தது. கிறிஸ்தவர்கள் பிரிவினையின் வழியில், ஒன்றாக உணவில் பங்குகொள்ளும்போது, அவர்கள் பொதுவானது, ஐக்கியம் மற்றும் பகிர்ந்துகொடுப்பதின் ஆவியை புறக்கணித்துக் கொண்டிருந்தார்கள். கிறிஸ்தவ ஐக்கியத்தில், கர்த்தருடைய இராப்போஜனத்தில் சொல்லியிருக்கிற முக்கியமான அம்சங்களாக இருந்தது. 8 முதற்கொண்டு 10ம் அதிகாரம் வரைக்கும் பவுல் வரையுறுத்தின பிரச்சனைகளுக்கு மற்றும் அதிகாரம் 12ல் ஆவியின் வரங்களைக் குறித்த அவருடைய அடுத்த சர்ச்சையின் அறிமுகத்திற்கு ஒரு பாலமாக இருக்கிறது.

கொரிந்து கிறிஸ்தவர்கள், ஆராதனையில் கூடி வரும்போது எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்ற கூடுதலான தகவல்கள் அவர்களுக்குத் தேவைப்பட்டது. குறிப்பாக, சபையில் அவர்களுடைய ஆவியின் வரங்களை சரியாக செயல்படுத்த வேண்டும் என்று பவுல் சொன்னார். அதிகாரம் 12 முதல் 14வரையில், "அன்றியும் சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக் குறித்து" (12:1) என்று அறிமுகமாகும் ஒரு பாடத்தை ஆரம்பிக்கலாம்.

### "ஆவியினாலே பேசுவது" (12:1-3)

**[1]அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக் குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை. [2]நீங்கள் அஞ்ஞானிகளாயிருந்தபோது ஏவப்பட்டபடியே, ஊமையான**

**விக்கிரகங்களிடத்தில் மனதைச் செலுத்தினீர்களென்று உங்களுக்குத் தெரியுமே. [3]ஆதலால், தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவனென்று சொல்லமாட்டானென்றும், பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசு வைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாதென்றும், உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.**

**வசனம் 1. அன்றியும், ... குறித்து** என்ற இரண்டு சொற்கள், பவுலுக்கு அவர்கள் கேட்ட கேள்வியோடு எழுதி அனுப்பின கடிதத்திற்கு கவனத்தை திருப்புகிறது. 7:1ல் பவுல் சொன்னது, “நீங்கள் எனக்கு எழுதின காரியங்களைக்குறித்து நான் எழுதுகிறதென்னவென்றால், ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது.” 8:1ல் “விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட-வைகளைக்குறித்த விஷயத்தில் ...” பவுல் சொல்லியிருந்தார்.

கிறிஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்தவர்களாகப் போகிறவர்களுக்கு தேவைப்பட்ட ஒரு ஜாக்கிரதையான வேர்பிரித்துதலின் மற்றொரு பகுதியை பவுல் இப்பொழுது பார்க்கவேண்டி இருந்தது. சபையில் சில பெயர்கள் பரிசுத்த ஆவியானவரால் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட அல்லது **ஆவிக்குரிய வரங்களை** கையாண்டு கொண்டிருந்தார்கள். இந்த ஆதி கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கப்பட்ட ஒரு சில வரங்கள் விக்கிரக ஆராதனைக்கு சமாந்தரமாக இருந்தது. உதாரணமாக, பழங்காலத்திலிருந்து, சுகமளிப்பவர்கள் மற்றும் சுகமாக்குதலை குறித்த தகவல்கள் கடந்து வந்திருந்தது. கூடுதலாக, இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகள் அல்லது ஆதி கிறிஸ்தவர்கள் சொன்னது போல, அப்பொல்லோவின் பக்தர்கள் “தீர்க்கதரிசனத்தை” கடுமையாக விவரித்திருக்கலாம், வார்த்தை என்னவோ ஒன்றாகவே இருந்தது.

எல்லா பாங்கான மத சம்பந்தமான ஜனங்களுக்கு, தெய்வீகமாக வரங்களைப் பெற்றவர்கள், வரங்கள் பெறாதவர்களை விட அதிகமாக தேவனோடு உறவை வைத்திருக்கும் ஒரு சின்னமாக ஊகித்தார்கள். பவுல் இந்த அனுமானத்தை நிராகரித்தார். இந்த கிறிஸ்தவர்களுக்கு, ஒருவரோடொருவர் நல்ல உறவில் இருக்க, தெய்வீக வரங்களை காட்டிலும், கிறிஸ்துவுக்குள் வாழ்வதே முக்கியமாக இருந்தது. அதே சமயத்தில், விசேஷமான வரங்களின் முக்கியத்துவத்தை பவுல் அசட்டையாகப் பார்க்கவில்லை. அவர், தேவனுடைய வார்த்தைக்கும் விக்கிரக ஆராதனைக்காரர்கள் செய்யும் சடங்குக்கும் வித்தியாசம் உண்டு என்று சகோதரர்கள் அறிந்திருக்க விரும்பினார். கிறிஸ்தவர்களுக்கும் அவைகள் இருப்பது மற்றும் அவைகளுடைய நோக்கம் வித்தியாசமான ஒரு சுபாவத்தில் இருந்தது.

பெயரடையான πνευματικῶν (*pneumatikōn*, “spiritual”) என்பது நடுநிலையிலிருந்து, 12:1ல் சொற்றொடர் சிறந்ததாக “ஆவிக்குரிய காரியங்கள்” அல்லது “ஆவியின் வரங்கள்” என்று மொழிபெயர்க்கப்-

பட்டிருக்கலாம். இன்னொரு வகையில், அது ஆண்பாலாக இருந்து, “ஆவிக்குரிய ஜனங்கள்” என்ற அர்த்தத்தை கொடுத்திருக்கலாம். தொடர்ந்து வரும் சர்ச்சையில், பவுலின் மனதில் கொரிந்துவில் ஒரு சிலர் பரிசுத்தாவி மூலமாக பெற்றுக் கொண்டிருந்த வரங்கள் இருந்திருக்கலாம் (காண்க 12:8). அக்காரணத்தைக் கொண்டு, NASB யின்மொழி-பெயர்ப்பாளர்கள் “வரங்களை” சாய்வு வடிவில் போடுவதே சரியானது என்று தீர்மானித்தார்கள். இயற்கையாகவே, தேவன் அநேக ஜனங்களுக்கு பிரசித்தமான தாலந்துகளை அல்லது திறமைகளை கொடுத்திருக்கிறார், ஆனால், பவுல் அற்புதமான வரங்களை குறித்து பேசிக் கொண்டு இருந்தார்.

**வசனம் 2.** நீங்கள் அஞ்ஞானிகளாயிருந்தபோது ஏவப்பட்டபடியே, **ஊமையான விக்கிரகங்களிடத்தில் மனதைச் செலுத்தினீர்கள்** என்று பவுல் சொன்னார். “அஞ்ஞானிகள்” (புறஜாதியார்) என்ற கிரேக்க வார்த்தை ἔθνη (*ethnē*, “ஜனங்கள்”), என்பதில் எதிர்மறையான சித்தாத்தங்கள் இல்லை. ஆனால், சுவிசேஷ கணக்கின்படி, அது பொதுவாக யூதருக்கு பயன் படுத்தப்படுகிறது. அந்த ஒரு சந்தர்ப்ப சூழலில், வார்த்தை இழிவு படுத்தக்கூடிய அர்த்தத்தில் இருக்கும். “ஜனங்கள்” “அஞ்ஞானி களாயிருந்தார்கள்” (புறஜாதியாராய்), அதாவது, யூதரல்லாதவர்கள் விக்கிரக ஆராதனைக்காரர்களாக இருந்தார்கள். அவர்கள் தேவனை குறித்தோ அல்லது அவருடைய கட்டளைகளைக் குறித்தோ அறியாமல் அக்கறை இல்லாதவர்களாக இருந்தார்கள். சபையானது தேவ இனத்தின் இஸ்ரவேலரை தேவ ஜனங்களாக புறந்தள்ளப்பட்டிருந்தது என்று பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தி இருந்தார் (உதாரணமாக, ரோமர் 2:29 பாருங்கள்), ஆனால், மாற்றமானது *ethnē* என்ற வார்த்தைக்குஒரு புதிய அர்த்தத்தை கொடுத்திருந்தது. கிரேக்க வார்த்தையின் இரண்டு அர்த்தமும் ஒன்றாகவே இருந்தாலும், ஆங்கிலம் பேசுபவர்களுக்கு, கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் “புறஜாதியாராய்” அல்ல, ஆனால், “அஞ்ஞானிகளாய்” இருந்தார்கள். 12:2ல் பவுல், அவர்களை, அவர்கள் பேசமுடியாத விக்கிரகங்களை ஆராதித்தபோது இருந்த முந்தின கிறிஸ்தவர்களான சில வாசகர்களைக் குறிப்பிட்டு கொண்டிருந்தார்.

கடந்த நான்கு அதிகாரங்களிலும் பவுலின் சர்ச்சைக்கு பின்னணியில் விக்கிரக ஆராதனை இருந்தது, ஆனால், 12:2ல் உள்ள வார்த்தைகள், சபை ஆராதனையின் போது கிறிஸ்தவர்கள் எப்படியாக நடந்துகொள்ள வேண்டும் என்ற சர்ச்சையின் மாற்றத்தின் ஒரு பகுதியாக இருந்தது. விக்கிரகங்களை தேவர்கள் என்று நினைத்த மற்றும் உலகத்தின் ஒரே மெய்தேவனாம், நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் தந்தையை அங்கீகரித்தவர்கள் இடையில் இருந்த நடக்கையின் மூல வித்தியாசத்தின் மீதே பவுல் நோக்கமாக இருந்தது. பவுலைப் போன்ற யூதருக்கு, வித்தியாச மானது யூத வரலாறு மற்றும்

வசனங்கள் வேர்பாய்ந்திருந்தது (காண்க ஏசாயா 44:9-11; எரே. 10:1-5; சங். 115:3-8).

முற்காலத்தில், ஒரு சில கிறிஸ்தவர்கள், "ஊமை விக்கிரகங்களை" சேவித்திருந்தார்கள். இவைகள் வல்லமை இல்லாததாக இருந்தது, காரணம் அவைகள் இல்லவே இல்லை. கிறிஸ்தவர்கள் அனுபவித்திருந்த ஆவியின் வரங்களை விக்கிரக ஆராதனையின் பழக்கத்திற்கு குழப்பிக்கொள்ளக் கூடாது. தீர்க்கதரிசனம், குணமாக்குதல், அல்லது பற்பல பாஷைகளை பேசுவது, இவைகளுக்கும் புறஜாதியாரின் சடங்குகளுக்கும் மேலோட்டமான ஒற்றுமைகள் இருக்கலாம்; ஆனால், இந்த கிறிஸ்தவர்கள் அனுபவித்தது முற்றிலும் வேறுபட்டதாய் இருந்தது.

**வசனம் 3.** பவுல் சகோதரர்களுக்கு என்ன தெரிவிக்க வேண்டியிருந்தது என்பது முதலில் இரகசியமாக இருக்கிறது. **தேவனுடைய ஆவியினாலே பேசுகிற** எவனும், "'Ανάθεμα 'Iησοῦ" (*Anathema Iēsous*) என்றால், "இயேசுவைச் சபிக்கப்பட்டவன்" என்று சொல்லுவான் என்பதை யூகித்து பார்க்க முடியாது. யாரும் அப்படியான காரியத்தை செய்யாமல் இருந்திருந்தால், பவுலின் எச்சரிக்கை ஒரு மிதமிஞ்சியதாக இருந்தது. குறிப்பிட்ட சிலர் "தேவனுடைய ஆவியானவரை" முறையிட்டு, **இயேசுவைச் சபிக்கப்பட்டவன்** என்று சொன்னால், அவர்கள் யாராய் இருப்பார் கள் மற்றும் அவர்களை ஏவினது எதுவாக இருந்திருக்கும்? இந்த ஒரு இரகசியத்தை அப்போஸ்தலர் ஏன் விவரிப்பதில் தவறினார்?

ஒருவேளை, பவுலுக்கு யாரையுமே "ஆவியிலே பேசும்" ஒருவர் இந்த காரியத்தை செய்வார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல விரும்பவில்லை போல. புறஜாதியார் கையாண்ட அந்நிய பாஷை மற்றும் தீர்க்கதரிசனத்தைப் போலவே இவர்கள் செய்துகொண் டிருக்கும் காரியத்தைக் குறித்த ஒரு சில ஆட்சேபனைகளுக்கு இவர் மறுத்தரவு கொடுத்துக் கொண்டிருக்கலாம். தோற்றத்தில், அத்தகைய பழக்கங்கள் தேவ ஆராதனையைவிட வித்தியாசப் பட்டதாக இருக்கவில்லை. Dionysus மற்றும் Cybele, பக்தர்கள் இடையில் இருந்த அத்துமீறல்கள் பேர்போனதாக இருந்தது. ஒரு சில கிறிஸ்தவர்கள் (ஒருவேளை யூத கிறிஸ்தவர்கள்) அந்நிய பாஷையில் பேசுவதை ஆட்சேபித்திருக்கலாம். ஏனென்றால், விக்கிரக ஆராதனை செய்தவருக்கு அவ்வாறாகவே நடந்துக் கொண்டார்கள். பவுலின் வார்த்தைகளை வரவழைத்த, சூழ்நிலை அப்படியாக இருந்திருந்தால், அவர் ஆவியின் வரங்களை உபயோகித்துக் கொண்டிருந்தவர்களை அவர் பாதுகாத்துக் கொண்டிருந்தார். ஒருவேளை அந்நிய பாஷையில் பேசுவது, அதை பார்த்தவர்களுக்கு அந்நிய தேவர்களின் பக்தர்களின் மூளை கோளாறைப் பற்றி நினைவூட்டி இருக்கலாம்; ஆனால், பரிசுத்த ஆவியானவரின் திறனளிக்கும் வல்லமையானது இதை, கிறிஸ்துவை

பின்பற்றுகிறவர்களுக்கு மகா அர்த்தத்தைக் கொடுக்கும், முற்றிலும் ஒரு மாறுபட்ட நிகழ்வாக மாற்றியது. கிறிஸ்தவர்களுக்குள் செயல்பட்ட தெய்வீக வல்லமை புற ஜாதியாரை கிளறிவிடுவது போல இருக்கவில்லை. தேவனுடைய ஆவியினாலே ஒருவனும் விக்கிரக ஆராதனைக்காரர்கள் சொன்னதைச் சொல்லமாட்டார்கள்: “இயேசுவைச் சபிக்கப்பட்டவன்” என்று இன்னும், **இயேசுவைக் கர்த்தரென்று** தங்கள் இருதயங்களிலிருந்து அறிக்கை செய்தவர்கள், பரிசுத்தாவியின் ஏவுதலில் அவர்கள் இருந்ததைக் காட்டினார்கள்.

அப்போஸ்தலன், நிராகரிப்பை ஆதரிப்பதற்காகவே இரண்டாவது அறிக்கையை செய்திருப்பார். ஒருவன், சுயமாக தூண்டப்பட்டு, மூளை கிளர்ச்சியில் கிறிஸ்துவை கர்த்தர் என்று அறிக்கை செய்வதற்கு, தேவ ஆவியைக் கொண்டு இயேசுவை சபிப்பது என்பது நேர்மறையான காரியமாக இருக்கிறது. மற்றொரு வகையில் சொன்னால், ஆவியின் தாக்கத்தால் இருக்கும் ஒருவர் “இயேசுவைச் சபிக்கப்பட்டவன்,” என்று சொல்லுவார் என்று நினைப்பது விசித்திரமானது; அதே போலவே, ஒருவனும் ஆவியினாலே நடத்தப்படாமல் இயேசுவை கர்த்தர் என்று அங்கீகரிக்க முடியாது. “இயேசுவைக் கர்த்தரென்று” என்ற நேர்மையான அறிக்கை மட்டுமே அறிக்கையாளர் பரிசுத்த ஆவியின் தாக்கத்தால் இருக்கிறார் என்ற சாட்சியாக இருக்கிறது. இயேசுவை இரட்சகர், தேவகுமாரன் என்ற பொதுவான அறிக்கை அவர்கள் ஒருவரையொருவர் ஆதரிக்க காரணமாக இருந்தது. அவர்கள் ஒருவரிலொருவரின் வரங்களை அனுபவிக்க வேண்-டியிருந்தது மற்றும் எந்த வரம் மற்றொன்றை விட சிறந்தது என்ற போட்டியிடும் யோசனைகளை விட்டகற்ற வேண்டி இருந்தது. ஏற்கனவே, அப்போஸ்தலர் சரீரத்தின் ஐக்கியத்தைப் பற்றி முக்கியத்துவப் படுத்தியிருந்தார்.

## “வரங்களில் வித்தியாசங்கள்” (12:4-11)

**4வரங்களில் வித்தியாசங்கள் உண்டு ஆவியா-னவர் ஒருவரே.
5ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே.
6கிரியைகளிலேயும் வித்தியாசங்களுண்டு, எல்லாருக்குள்ளும்
எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே. 7ஆவியினுடைய
அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்
பட்டிருக்கிறது. 8எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே
ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த
ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், 9வேறொருவனுக்கு
அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த
ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், 10வேறொரு வனுக்கு
அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம்**

**உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. [11]இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்.**

கொரிந்தியருக்கு எழுதும் இந்த கடிதத்தின், தொடக்கத்தில் விசுவாசிகளுக்குள் ஐக்கியமே பவுலின் முக்கிய பாரமாக இருந்தது (1:10; காண்க 3:3). இந்த சகோதரர்கள் ஐக்கியத்தைப் பற்றிய கேள்வி கேட்டிருக்கவில்லை; அவர்கள் ஆவியின் வரங்களைப் பற்றி, அவைகளை எப்படியாக கையாள வேண்டும், மற்றும் அவைகளின் முக்கியத்துவத்தைக் குறித்துக் கேட்டிருந்தார்கள். ஆகிலும், பவுல் இந்த கேள்விகளை கிறிஸ்துவின் சரீரத்தில் ஒற்றுமையின் விஷயத்தின் கீழ் இந்த கேள்விகளைக் கேட்டார். முன்பு இயேசு கிறிஸ்துவின் பாரமே அப்போஸ்தலனுடைய பாரமாக இருந்தது (யோவான் 17:20, 21). அவருக்குப் பின், நாற்பது ஆண்டுகள் கழித்து வந்த ரோமின் Clementன் பாரம் கூட அதுவாகவே இருந்தது (c. கி.பி. 98)[2] மற்றும் நூறாண்டு காலங்களில் எண்ணிமுடியாத பெயருடைய பாரமும் அதுவாகவே இருந்தது. ஆவியின் வரங்களைக் குறித்த கேள்விகள், பவுலுக்கு கிறிஸ்துவின் சரீரத்தின் குணாதிசயங்களைக் குறித்து முக்கியமான விஷயங்களை எழுத ஒரு வரவேற்பாக இருந்தது.

**வசனம் 4.** வெளிப்படையாகவே, 12:4ல் பவுலின் மனதில் இருந்த **வரங்கள்** (χαρίσματα, *charismata*) வசனம் 1ல் சொன்ன "ஆவியின் வரங்களு"க்கு (*pneumatikōn*) ஒப்பாகவே இருந்தது. புதிய ஏற்பாட்டில் "வரம்" என்ற வார்த்தைக்கு மிக பொருத்தமான கிரேக்க வார்த்தை δῶρον (*dōron*) என்றாகும்; இந்த வார்த்தையின் வேறு வடிவங்கள் δωρεά (*dōrea*) மற்றும் δώρημα (*dōrēma*). இந்த மூன்று வார்த்தைகளும் புதிய உடன்படிக்கையில் முப்பதுக்கும் மேற்பட்ட முறை வருகிறது, ஆனால், பவுல் அவருடைய கடிதங்களில் *dōrea* என்ற வார்த்தையை ஐந்து முறையும் *dōron* என்ற வார்த்தையை ஒரு முறை மட்டுமே பயன்படுத்தி இருக்கிறார். மற்றொரு புறத்தில், புதிய ஏற்பாட்டில் பவுலின், ஒன்று தவிர எல்லா நிருபங்களிலும் χάρισμα (*charisma*), என்ற வார்த்தை பதினேழு முறை தோன்றுகிறது. பவுல் பயன்படுத்தின பதினாறு முறையில் ஏழு முறை 1 கொரிந்தியரில் தோன்றுகிறது. 12 அதிகாரத்தில் அவர் அந்த வார்த்தையை ஐந்து முறை பயன்படுத்தியிருக்கிறார். பவுல் "வரங்கள்" என்ற வார்த்தைக்கு மிக ஜாக்கிரதையாக *charismata* என்ற வார்த்தையை தேர்ந் தெடுத்திருக்கிறார்; அது χάρις (*charis*, "கிருபை") மற்றும் χαρά (*chara*, "சந்தோஷம்") என்ற அதே அர்த்தத்தின் வடிவில் வருகிறது.[3] இந்த சொல்லியலை பயன்படுத்துவதில், அவர் குறிப்பிட்டிருந்த வரங்கள்

தேவனுடைய கிருபை மற்றும் சந்தோஷத்தின் விரிவாக்கமாக, கிறிஸ்துவை கர்த்தராக அறிக்கை செய்வதோடு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

எழுத்தில் வரும் வரங்களின் விவரணையானது அவை தெய்வீக சொத்து என்று சுட்டிக்காட்டுகிறது. தேவனுடைய கிருபையின் "வரங்களானது" (*charismata*) தேவன் தம்முடைய ஜனங்களுக்கு, நித்தியஜீவனை உட்பட்டு, அவர் செய்யும் காரியங்களை எல்லாம் உட்கொண்டிருக்கிறது (ரோமர் 6:23); ஆனால், 1 கொரி. 12-14ன் சந்தர்ப்ப சூழல் இந்த வார்த்தைக்கு ஒரு எல்லையை நியமிக்கிறது. சொல்லியல் எப்பொழு-துமே ஒரே அர்த்தத்தை மிக சரியாகக் கொடுக்காமல் இருக்க, பவுல் இங்கு "ஆவியின் வரங்களை" (12:1) குறித்த கேள்விகளுக்குப் பதிலை கொடுத்து கொண்டிருந்தார். அப்போஸ்தலனின் மறுஉத்தரவில், அவர் கொடுக்கும் இந்த வரங்களின் பட்டியலை பார்க்கையில், அவர் குறிப்பிட்ட ஒரு சில வகையான "வரங்களைக்" குறிப்பிட்டிருக்கிறார் என்று மொழி பெயர்ப்பாளருக்கு ஒரு நிச்சயம் ஆகியிருக்கும்.[4] குறிப்பிட்ட இந்த வரங்கள் பரிசுத்த ஆவியானவர் சபை கட்டப்படவே கொடுக்கப்பட்டிருந்தது, ஆனால், மனிதனின் பெருமை, ஆவியின் சொத்துக்களை தனிப்பட்ட ஒரு அந்தஸ்தாக திருப்பிக் கொண்டிருந்தது. மிக முக்கியமானவர்களில், வரங்களை பகிரங்கமாக செயல்படுத்தும் போட்டியானது சபையில் பிரிவினைக்கு இடம் கொடுத்திருந்தது.

தெய்வீக வரங்களின் ஒரு முக்கியமான குணா-திசயம் என்றால், இந்த வரங்களைப் பெற்றிருந்த ஆதி கிறிஸ்தவர்கள் தங்களுக்கு விருப்பமானபடி கையாண்டார்கள். உதாரணமாக, பேதுரு மற்றும் யோவான், ஆலய சுற்றாடலில் அனேக முடவர்கள் அல்லது குருடர்களை குணமாக்கியிருக்கலாம். அவர்கள் எந்த நபரைக் குணப்படுத்த வேண்டும் என்று தங்கள் விருப்பப்படி தேர்ந்தெடுத்தார்கள் (அப். 3:6 போல). அதே விதத்தில், குணமாக்கும் வரங்களைப் பெற்றிருந்த வேறு கிறிஸ்தவர்களும், அது செய்ய அவர்களுக்கு சரியானதாக தோன்றிய போதே வியாதியஸ்தர்களை குணமாக்கியிருக்கலாம். அதேபோல், பற்பலபாஷை அல்லது தீர்க்கதரிசனம் வரம் கொண்டவர்கள், தங்கள் விருப்பப்படியே இந்த வரங்களை செயல்படுத்தினார்கள் (காண்க 1 கொரி. 14:32). இந்த வரங்களை பயன்படுத்தும்போது சிந்தனை மற்றும் சித்தம் இரண்டுமே இணைந்திருந்தது; இவர்கள் விவரிக்க முடியாத விதத்தில் நடந்து கொள்ளும்படியான எந்த தூண்டுதலும் அல்லது உணர்ச்சியும், இந்த கிறிஸ்தவர்கள் மீது வீசவில்லை.

தேவன் தாம் விரும்பின நேரத்தில் அவருடைய ஜனங்களின் முறைகளை கேட்பார். முதலாம் நூற்றாண்டில் இருந்தது போலவே, நவீன யுகத்தின் சபையில் கர்த்தருடைய ஜெபத்தின் பதிலளித்தல்,

தேவனுடைய கிரியையின் நற்குணத்தின்படி, தெய்வீகமாக இருக்கிறது. நவீன கிறிஸ்தவர்களின் ஜெபத்திற்கு தேவனுடைய மறுஉத்தரவுக்கும் மற்றும் முதலாம் நூற்றாண்டில் தெய்வீக வரங்களை பெற்றவர்களின் கிரியைகளுக்கும் இருக்கும் வித்தியாசமானது, முதலாம் நூற்றாண்டில் இருந்தவர்கள் தங்கள் விருப்பபடி வரங்களை செயல்படுத்தினார்கள். அவர்கள் தங்களின் வரங்களை சொந்த விருப்பப்படி செயல்படுத்தும் ஒரு தெய்வீகமான சிறப்புரிமையை தேவன் அவர்களுக்கு கொடுத்திருந்தார். இந்த ஒரு அர்த்தத்தில் தெய்வீகமான வரங்கள் நிறுத்தப்பட்டது; தனிப்பட்ட ஒருவர் இன்னும் தேவனுடைய வல்லமையை சார்ந்திருக்க அதிகாரம் மற்றும் அவர்கள் விருப்பப்படி அற்புத கிரியைகளைச் செயல்படுத்தலாம். முதலாம் நூற்றாண்டின் சபையில் கூட, ஆவியின் வரங்களைப் பெற்ற தனிப்பட்ட ஒருவர் கூட தேவனுக்கு கீழ்ப்படிந்திருந்தார்கள். தேவனுடைய சித்தத்திற்கு மாறாக அவர்கள் ஒரு அற்புத அடையாளத்தைக் கொண்டு வரும்போது, தேவன் அவர் விருப்பப்படி குறுக்கிட்டிருக்கலாம்.

எல்லா கிறிஸ்தவர்களுக்கும், அவர்கள் அற்புதங்களைச் செய்ய, இந்த ஆவியின் வரங்கள் (*charismata*) கொடுக்கப்பட்டிருக்க வில்லை என்று கொரிந்தியர் அறிந்திருப்பது முக்கியமாக இருந்தது. அற்புத வரங்களைப் பெற்றிருந்தவர்களுக்கு, ஒரே ஆவியின் கிரியைகள் வெவ்வேறு வழிகளில் வெளிபாட்டிருந்தது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் அடுத்தவனுடைய வரங்களை கனப்படுத்தி, சரீரத்திற்கு விசுவாசத்தையும் பக்திவிருத்தியையும் கொண்டு வந்த காரியங்களில் சந்தோஷத்தைக் காணவேண்டி இருந்தது. **ஒரே ஆவி** யானது எல்லா கொரிந்தியரையும், அவர்கள் வெவ்வேறு வரங்களின் வகைகளை கொண்டவர்களாக இருந்தாலும், ஒரே சரீரமாக பிணைத்தது. ஆவியின் வரங்களைப் பெற்றவர்களை பவுல் கடிந்து கொண்டிருந்தார். விசேஷித்த வரம் பெற்ற இந்த கிறிஸ்தவர்களுக்கு அவர்கள் பெற்றிருந்த வரங்களின் மற்றும் அவைகளை கட்டுப்படுத்தும் அவர்களின் சாமர்த்தியத்தை குறித்த அறிவுடையவர்களாக இருந்தார்கள். யாருக்கு சிறந்த வரம் இருந்தது என்ற போட்டிக்கு ஒரு முடிவு வைப்பது அவசியம் என்று பவுல் எண்ணினார்.

**வசனங்கள் 5, 6.** ஆவியானவர் கொடுத்த எல்லா வரங்களுக்கும் “ஊழியம்” (διακονία, *diakonia*) ஒரு அம்சமாக இருந்தது ஏனென்றால், கர்த்தரே எல்லா நன்மைக்கும் மூல காரணராய் இருக்கிறார். **ஊழியங்களில் வித்தியாசங்கள்** இருப்பதற்காக மற்றும் வெவ்வேறு வரங்களை கர்த்தர் ஒருவரே கொடுத்திருப்பதற்காக கிறிஸ்தவர்கள் ஆச்சரியப்படக்கூடாது என்று பவுல்சொன்னார். சகோதரர்கள், வரங்களின் வித்தியாசத்தைக் கண்டு கொண்டு அவைகளை கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களுக்கு கொடுத்திருக்கும் வெவ்வேறு

“ஊழியங்களுக்கு” இணைக்க வேண்டும். உதாரணமாக, ஒரு சிலர் அப்போஸ்தலர், சிலர் மூப்பர்கள், ஒரு சிலர் போதகர்கள், மற்றும் சிலர் சுவிசேஷகர்களாக இருந்தார்கள் (காண்க 12:29; எபே. 4:11). ஊழியத்திற்கு ஆயத்தமானதின் விளைவாக தேவன் ஆவியின் வெவ்வேறு வரங்களைப் பகிர்ந்து கொடுத்தார். கொரிந்தியரின் அறிவுக்கு பவுல் முறையிட்டுக் கொண்டிருக்கலாம். காரணம், ஜனங்கள் வித்தியாசமாக இருக்கிறார்கள், ஆவியானவர் அவனவனுக்கு ஏற்றபடி வரங்களைக் கொடுத்தார்.

“ஒரே ஆவியானவர்,” “ஒரே கர்த்தர்” இயேசு, மற்றும் **ஒரே தேவன்** “வித்தியாசமான வரங்களை,” “வித்தியாசமான ஊழியங்களை,” மற்றும் **வித்தியாசமான கிரியைகளை** கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கிறார்கள் (12:4-6). 12:6ல் KJV, “வித்தியாசமான விளைவுகளுக்கு” பதிலாக “வேறுபாடான இயக்கங்கள்” என்று குறிப்பிடுகிறது. CEV இவ்வாறாக சொல்லுகிறது, “நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு காரியங்களைச் செய்யலாம். ஆனாலும் ஒரே தேவன் நம்மெல்லாரிலும் கிரியை செய்கிறார் மற்றும் நாம் செய்யும் அனைத்திலும் உதவி செய்கிறார்.” ஆவியின் வரங்களை பெற்றிருப்பது என்பது ஆவிக்குரிய உயர்ந்த சமதளத்தில் இருந்தார் அல்லது தேவனிடத்தில் விசேஷித்த கிருபையைப் பெற்றிருந்தார் என்றல்ல. ஆவியின் வரங்கள் சபையைக் கட்டி எழுப்புவதற்காகவே இருந்தது, தனிப்பட்ட ஒருவர் பெருமை பாராட்ட அல்ல. இந்த எல்லா கிரியைகளையும் தேவன், கிறிஸ்து மற்றும் ஆவியானவருக்கு ஏற்றிச் சொல்லி, பவுல் தெய்வீகத்தின் ஒற்றுமையை வலியுறுத்தினார். தேவன், இயேசு மற்றும் பரிசுத்த ஆவியானவரின் செயல்களெல்லாம் ஒன்றுக்கொன்று பிணைக்கப்பட்டு இருந்தது. “திரித்துவம்” என்ற வார்த்தை இல்லாமல் இருந்தாலும், புதிய ஏற்பாட்டிலெல்லாம், இந்த தெய்வீக ஒற்றுமையின் சூழல் காணப்படுகிறது.

கிறிஸ்தவர்கள், ஒரே சரீரமாய் கட்டப்பட்டவர்களாக ஒருவரையொருவர் ஆதரித்து ஊக்குவிப்பதே பவுலின் பாரமாக இருந்தது. வேறு காரியங்களோடு கூட, ஆவியின் வரங்கள், கிறிஸ்துவின் சபை ஐக்கியத்தை ஆதரிப்பதற்காகவே இருந்தது. தன்னு-டைய ஆவியின் வரங்கள் தேவனுடைய விசேஷித்த கிருபையின் அடையாளம் என்று புரிந்துகொள்ளும் எந்த ஒரு கிறிஸ்தவனும் மற்றவர்களுக்கு, தேவன் அசாதாரணமான காரியங்களைச் செய்ய வல்லமைகளை கொடுத்திருந்தாலும் கொடுக்காமல் போனாலும் அவர்களுக்கும் தேவனுடைய கிருபை உண்டென்று ஒப்புக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு கீழ்ப்படியும் விசுவாசிக்கும் தேவனுடைய கிருபை தங்கியிருக்கிறது.

**வசனம் 7.** ஆவியின் வரங்கள் **பொதுவான நன்மைக்காகவே** என்று பவுல் சொன்னார். REB சொல்லுவது “பயனுள்ள உபதேசங்களுக்காக.”

தேவன் **ஆவியின் வெளிப்பாடுகளை**, அதாவது, ஆவியின் வரங்களை, அதைக் கொண்ட அந்த தனிப் பட்ட நபரை உயர்த்துவதற்காக கொடுக்கவில்லை. சகோதரர்களிடையில் பகைமை மற்றும் வேற்றுமையின் சூழ்நிலைக்கு தூரமாக, ஆவியின் வரங்கள் எல்லோருடைய ஆதாயத்திற்காகவே இருக்க வேண்டும். தனிப்பட்ட அல்லது தனித்துவப்படுத்தபட்ட அனுபவத்தை விட, ஆவியானவரின் கிரியைகள் விசுவாசி-களை ஒன்று சேர்த்து, சரீரத்தை பெலப்படுத்துவதாகவே இருந்தது. பவுல் மிக ஜாக்கிரதையாக சர்ச்சையை வேறு திசைக்கு திருப்பிக் கொண்டிருந்தார். “அன்றியும், சகோதரரே, ஆவிக்குரியவரங்களைக் குறித்து,” என்பதற்குப் பதிலாக, அவர் “பொதுவான நன்மையைக் குறித்து,” அல்லது “சரீரத்தின் ஐக்கியத்தைக் குறித்து,” என்பதை யோசித்துக் கொண்டிருக்கலாம். ஆவியின் வரங்களைப் பெற்று அதை பயன்படுத்தும் காரியத்தில் கொரிந்தியரின் மனப்பான்மை, சபையில் நிலவியிருந்த பிரிவினையின் பிரச்சனைகள் ஒரு அடையாளமாக இருந்தது. வரங்களின் இந்த விரித்துரையானது, கொரிந்து சபையில் தொற்றிக் கொண்டிருந்த பிரிவினையின் எல்லைக்கு ஒரு உள் நோட்டத்தை கொடுக்கிறது. ஒவ்வொன்றும் எச்சரிக்கையாக பார்க்கத் தக்கதாகவே இருக்கிறது.

**வசனம் 8.** அப்போஸ்தலன் தன்னுடைய பொதுவான சிறு அறிவுறுத்தலை, ஆவியின் குறிப்பிட்ட வரங்களை கணக்கிடுவதில், 12:7ல் இருக்கும் “ஆவியின் அனுக்கிரகத்தை” விரிவாக்குதலினாலே தன்னுடைய கண்ணோட்டத்தை கொண்டு வந்தார். கொரிந்தியர் உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து அதற்காகவே போட்டியிட்டுக் கொண்டிருந்த கண்கவரும் வரங்களைக் குறித்து ஆரம்பிக்கவில்லை. மேலாக, பவுல், சரீரத்தின் விலையேறப்பெற்ற மிக சாதாரணமான வரங்களிலிருந்து ஆரம்பித்தார். அவர்களுக்குள் கிரியை செய்த ஆவியானவரே சபையில் **சிலருக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும்** வேறொருவனுக்கு **அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்** கொடுத்திருந்தது. இவைகள் “பொது நன்மைக்காக ஆவியின் வெளிப்பாடாக[களாக]” இருந்தது; ஆனால், சிறிதே பிரமிக்கத்தக்க வரங்க-ளாக இருந்து, அவைகளைக் கொண்டிருந்தவர்களுக்கு, அல்லது அவைகள் வெளிப்படுவதை பார்ப்பவர்களுக்கு சிறிய பரபரப்பை ஏற்படுத்தியது.

பவுல் ஞான வரத்தை, அறிவை உணர்த்தும் வரத்தோடு சமந்தப்படுத்தி என்ன சொன்னார் என்று தெரிந்து கொள்ளுவது பயனுள்ளதாக இருக்கும். ஒருவேளை ஞானம் என்பது “தீர்க்கதரிசன வரம் அல்லது அறிவை உணர்த்தும் வசனத்தினாலே வெளிப்படுத்தப்பட்ட அறிவின் தாக்கத்தைப் பார்க்கும் ஒரு ஏவப்பட்ட திறமையாக இருக்கலாம்,” அதாவது, “தனிப்பட்ட நபர் அல்லது சபைக்கு தேவனுடைய வசனத்தை எப்படிக் கொடுப்பது என்று

மற்றவர்களுக்கு போதிக்கும் திறனாக இருக்கலாம்."[5] இங்கு சொல்லப்பட்டிருக்கும் ஞானம் மற்றும் அறிவு என்பதற்கும் மனிதனுடைய ஞானத்திற்கும் குழப்பிகொள்ளக்கூடாது என்று தெளிவாகிறது. இந்த காலத்தின் அறிவுக்கும் ஆவியின் வரங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

பவுல் ஞானம் மற்றும் அறிவை, ஆவியின் அற்புத வெளிப்பாட்டிலிருந்து ஒரு இயற்கை சொத்தாக வித்தியாசப் படுத்தவில்லை. கொரிந்து விசுவாசி-களில் வேறுபாடு என்பது வெளிப்படையாகவே இருந்தது என்பதில் சந்தேகமேயில்லை. இல்லை-யெனில், அப்போஸ்தலனுக்கு அதை உரையாற்றும் அவசியம் இல்லாமல் இருந்திருக்கும். தெய்வீகமான ஞானம் அல்லது ஆவியின் வேறெந்த வரத்தையும் கொடுப்பதில் ஆவியானவர் எந்த ஒரு கட்டளை விதிகளை கொடுக்கும் அறிகுறியை நாம் காண்-பதில்லை. பவுல், தன்னுடைய சொந்த அப்போஸ்தல அதிகாரத்தோடு, பேதுரு மற்றும் யோவான் சமாரியர்-களில் செய்தது போல குறிப்பிட்ட ஒரு சில தனிப்பட்ட நபர்கள் மேல் தன் கையை வைத்து சபையில் ஊழியம் செய்ய வைத்தாரா (அப். 8:14-18)? அந்த காலத்தில், அப்போஸ்தலர்கள் தங்கள் கையை வைத்து அற்புத வரங்களை கொடுக்காமல் இருந்தி-ருந்தால், ஆவியானவர் தன்னுடைய இரகசியமான முறையிலே விசுவாசிகளை வரங்களுக்காக தோராய-மாக தெரிந்து கொண்டார் என்ற முடிவுக்கு வந்திருக்கலாம். அப்படி இருந்திருந்தால், ஒரு காலை-யில் விசுவாசிகள் எழுந்து, அவர்கள் புரிந்து-கொள்ளாத அல்லது கேட்டுக் கொள்ளாத அசாதாரண-மான திறனை கண்டு பிடித்திருக்கலாம். ஆகிலும், பின்பு வரும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்ய வேண்டும் என்ற (1 கொரி. 14:40) பவுலின் முறையீடு, கொரிந்துவுக்கு, ஆவியின் வரங்கள், அப்போஸ்தல நியமனத்தால் வந்தது என்று சுட்டிக்காட்டுகிறது.

**வசனம் 9.** ஞானம் மற்றும் அறிவை போலவே, ஒவ்வொரு கிறிஸ்தவனிலும் எதிர்ப்பார்க்கப்பட்ட இயற்கை சொத்தாக **விசுவாசம்** இருந்தது. ஆகிலும், ஏற்கனவே சொல்லியிருக்கிற ஞானம் மற்றும் அறிவைப் போலவே "விசுவாசம்" ஒரே ஆவியான வராலே கொடுக்கப்பட்ட ஒரு விசேஷித்த வரமாக இருந்தது. "ஆவியின் வரமாக" விசுவாசத்தில் இருக்கும் அற்புதமான அம்சமானது சோதனைக்கு எதிர்த்து நிற்பது மற்றும் கிறிஸ்தவ உபதேசத்தின் அசாதாரண சவால்களுக்கு எதிர்ப்படும் ஒரு திறனாக இருக்கிறது. உதாரணமாக, கிரேக்க தத்துவவாதிகளை மறுக்கும் போது அற்புத அளவின் விசுவாசமானது, விசுவாசிகளுக்கு உதவியிருக்கலாம். இன்றைய நாளின் ஒரு கிறிஸ்தவன், அவனுக்கு அல்லது அவளுக்கு கிறிஸ்தவ அறிக்கையின் மூலமாக இருக்கும் சாதாரண விசுவாசத்திற்கு ஒப்பிடும்போது, ஆவியானவர் கொடுத்திருக்கும் விசுவாசத்தின்

சுபாவம் நன்றாகவே தெரியும் என்ற உறுதி இருக்காது. ஆகிலும், கொரிந்து சபையில் கேள்விக் குறியாக இருந்த விசுவாசமானது ஆவியானவரின் விசேஷ கொடுத்தலாக இருந்ததால், அது ஒரு அற்புத வரம் என்ற உறுதி நமக்குண்டு.

கொஞ்சமே வியக்கத்தக்க ஆவியின் வெளிப்பாட்டை ஒருவரை பெறும்படி வைராக்கியமான ஆசையை தூண்டிவிடாத வரங்களைப் பார்த்த பின்பு பவுல், கொரிந்தியர் போட்டியிட்டுக் கொண்டிருந்த வரங்களை நோக்கிச் சென்றார். **குணமாக்கும் வரங்களுக்கு** மேலாக விசுவாசம், ஞானம் மற்றும் அறிவுக்கு முக்கியத்துவம் கொடுத்து, எல்லாமே தேவனின் வரங்கள் என்று அப்போஸ்தலன் சொன்னது மட்டுமல்லாமல், முதலானவைகள் அதிகம் விரும்பத்தக்கது என்று நிரூபித்தார்.

“குணமாக்கும் வரங்களும்” என்று பவுலின் பன்மையை பயன்படுத்துதல், ஒரு சரளமான நவீனமான விஷயமாக இருக்கலாம், ஆனால், அதற்கு ஒரு முக்கியத்துவம் உண்டு என்று சந்தர்ப்பசூழல் சொல்லுகிறது. ஒருவேளை, ஒரு சில நிலைமையில் மட்டுமே ஒரு சிலருக்கு குணமாக்கியிருக்க முடிந்திருக்கலாம். குணமாக்கும் வரங்கள் அதை பெற்றிருந்தவர்களுக்கு சபையில் ஒரு முக்கி-யத்துவத்தை கொடுத்திருக்கலாம் என்பது தெளி-வாகிறது. வரங்களின் நோக்கம் இதுவாக இல்லை என்று பவுல் சொன்னார்; ஆவியானவருடைய எல்லா வரங்களும் சரீரத்தின் பக்தி விருத்திக்காகவே இருந்தது. “குணமாக்கும் வரங்கள்” என்று குறிப்பிடுவது எந்த ஒரு கூட்டத்திலும், கிறிஸ்தவர்கள் அல்லது கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களின் நடுவில் ஒரு பெரிய அசைவை ஏற்படுத்தியிருக்கும் தொடர்ச்சியான திறனை அறிமுகப்படுத்துகிறது.

**வசனம் 10.** அப்போஸ்தலன் சிறிது கவனத்தை கவரும் ஆவியின் வரங்களை (ஞானம், அறிவு, மற்றும் விசுவாசம்) அவைகளின் முக்கியத்துவத்தை அடிக்கோடிடும்படி மற்றும் அதிக பிரம்மிக்கத்தக்க வரங்களின் ஆர்வத்தை குறிக்கும்படியாக முதலில் வைத்திருக்கலாம். **அற்புதங்களைச்செய்யும்** சக்தியும் என்பது கீழ்க்கண்ட வரங்கள், அதின் கீழ் சீராக்கப்பட்டிருக்கும் ஒரு விரிந்த சொல்லாக இருக்கிறது. அப்படியெனில், “குணமாக்கும் வரங்கள்” தவறான இடத்தில் வைக்கப்பட்டிருக்கலாம். “அற்புதங்களைச் செய்யும் சக்தியை” அது முந்துவதில்லை, மாறாக அதை பின் பற்றவே ஒருவர் எதிர்ப்பார்ப்பார்கள். கொரிந்துவின் கிறிஸ்தவர்கள் வேறு வரங்களை விட குணமாக்கும் வரங்களையே தீவிரமாக நாடியிருப்பார்கள். நீடித்த வாழ்வின் ஒரு தனிப்பட்ட விருப்பமே, ஆவியானவர் பகிர்ந்தளித்த எல்லா வரங்களை காட்டிலும் குணமாக்கும் வல்லமையே அதிகமாக பின்பற்றப்பட்டிருக்கலாம். பதிவு செய்யப் பட்டிருக்கும் அற்புதங்கள். இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் செய்த அற்புதங்களின்

குணமாக்கும் அற்புதங்களாக இருந்தது.

காரணம் எதுவாக இருந்தாலும், பவுல் "குணமாக்கும் வரங்களை," "அற்புதங்களைச்செய்யும் சக்தி" என்ற மிக பொதுவான சொற்றொடருக்கு முன்பாக பட்டியலிட்டிருக்கிறார். அதற்கு பிறகு, அவர் கொரிந்துவிலிருந்த கிறிஸ்தவர்கள் அனுபவத்தின் படியே அற்புத வரங்களை தனிப்பட்ட வெளிப்பாடாக வைத்தார்.

வேறு அற்புத வரங்களில், கொரிந்துவில் குறிப்பிட்ட ஜனங்கள் ஆவியானவரால் தீர்க்கதரிசன உரைத்தலின் வரத்தையும் பெற்றி-ருந்தார்கள். ஆதி சபையிலே தீர்க்கதரிசிகள் கனப்படுத்தப்பட்டார்கள்; அவர்கள் முக்கியமான சேவைகளை புரிந்தார்கள் (எபே. 2:20; 4:11). அகபு எதிர்காலத்தை அறிவித்தான் (உதாரணமாக அப். 11:28; 21:10, 11), ஆனால், பொதுவாக தீர்க்கதரிசிகள் போதித்தார்கள் (அப். 15:32). ஒரு கிறிஸ்தவ போதகர் ஆவியின் விசேஷித்த அற்புத சொத்தை பெற்றிருக்க அவசியமில்லை, ஆனால், தீர்க்கதரிசிகளுக்கு அந்த அவசியம் இருந்தது. James Greenburyவின் முடிவுரை மிக நிச்சயமாகவே இருக்கிறது:

> ஆதலால், புதிய ஏற்பாடு முழுவதிலும், தீர்க்கதரிசனமானது சமத்துவமான வெளிப்பாடு, ஏவப்பட்டது மற்றும் அதிகார பூர்வமானது என்று அறிவுறுத்தும் எந்த சாட்சியமும் இல்லை.[6]

தீர்க்கதரிசனமானது தேவன் தம் தாசருக்கு கொடுத்த பழங்கால வரமாக இருக்கிறது; ஆனால், பழைய மற்றும் புதிய ஏற்பாடு இரண்டிலும், அவர்கள் தங்கள் சிந்தனையில் பேசினாலும், அது தேவனிடத்திலிருந்து தங்களுக்கு செய்தி கிடைத்திருக்கிறது என்று அவர்கள் சொல்லலாம் (எரே. 27:16). ஆதலால், ஜனங்களுக்கு வரங்களை ஆவிகளை **பகுத்தறிதலுக்காக கொடுப்பதே** ஆவியான வருக்கு *பி*ரயோஜனமாயிருக்கும். முதலாம் நூற்றாண்டின் சபைக்கு தீர்க்கதரிசனம் முக்கியமானதாக இருந்தது. சில தீர்க்கதரிசிகள் குறிப்பிட்ட சபைகளில் தெளிவாக விவாதிக்கப்பட்டிருந்த காரியங்களில் நிலையாக பொருத்தப்பட்டவர்களாக இருந்தார்கள். வேறு சிலர், உண்மையோ பொய்யோ, ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு அலைந்து திரிகிறவர்களாக இருந்தார்கள் (1 யோவான் 4:1).

கொரிந்தியரைப் பொறுத்தவரை மிக சிறந்ததாக இருந்த வரங்களை, பவுல் இறுதி வரை காத்திருக்க வைத்திருந்தார். கிறிஸ்தவர்கள் பற்பல பாஷைகளைப் பேசுதலின் திறமையில் போட்டியிட்டார்கள். பவுல் இந்த பாஷைகளை **பற்பல** வைகளாக இருந்ததை பவுல் புரிந்துக் கொண்டார். நவீன உலகத்தில் அனுபவித்திருக்கும் களிப்பூட்டும் கூற்றுக்களில் அவர்களுக்கு ஒரு சமத்துவம் இருந்தபடியால், கொரிந்துவில் களிப்பூட்டும் கூற்றுக்கள்,

"பற்பல" காரியத்தில் வேறுபட்டிருக்க எதிர்பார்த்திருக்க முடியாது. இன்றைய நாளில் குறிப்பிட்ட மத கூட்டங்கள் சொல்லும் கூற்றுகள் உணர்ச்சி வசப்படும் அனுபவமாக இருக்கிறது ("சமய ஈடுபாடு" என்று சிலர் சொல்லலாம்), ஆனால், "பாஷைகளின்" அத்தகையை காட்டுதல் பகுத்தறியும் உள்ளடக்கத்தைத் தெரிவிக்க முடியாது. பவுல் சர்ச்சித்த பாஷைகள் "பற்பல"வைகளாக இருந்தது, மற்றும் அந்த வார்த்தைக்கு புரிந்துகொள்ளும் ஒரு அர்த்தம் இருந்தது என்று அறிவுறுத்துகிறது.

கொரிந்து சபையில் பற்பல பாஷைகளின் நிகழ்வுகளை புரிந்துகொள்ள வாசகர்கள் வெகு தூரம் செல்ல வேண்டியிருக்கிறது, அவர்கள் அதை உணரும்போது பவுல் அவர்கள் "வியாக்கியானம் பண்ணுதலுக்கு" கீழ்ப்பட்டவர்களாக இருக்க பவுலின் எதிர்ப்பார்ப்பு என்று உணர்ந்துக் கொள்ளுவார்கள். கொரிந்தில் சில கிறிஸ்தவர்கள், "ஆவிகளை," அதாவது, தீர்க்கதரிசன வார்த்தை இருக்கிறது என்று சொன்னவர்கள் மற்றும் உண்மையாகவே பெற்றிருந்தவர்களுக்கு இடையில் பகுத்தறிய வேண்டியிருந்தது. ஒருவர் ஆவியினாலே அதிகாரத்தோடு அறிவித்துக் கொண்டிருந்த எல்லாவற்றையுமே சகோதரர்கள் தழுவக்கூடாது. அதேபோல், பற்பல பாஷைகள் சபை கட்டி எழுப்புவதற்காக இருந்தால், அவைகளுக்கு வியாக்கியானம் செய்ய வேண்டி இருந்தது. வரம் பெற்ற கிறிஸ்தவர்களுக்கு ஆவியானவர் கொடுத்திருந்த வாய் மொழிகள் ஏதோ திக்குவதல்ல; அவைகள் அர்த்தமுள்ளதாக இருந்தது. "பற்பல பாஷைகள்" மொழிகளாக இருந்தது. அவைகள் பகுத்தறியும் ஆலோசனைகளாக இருந்தது.

புதிய ஏற்பாட்டில் நிருபங்களில், பற்பல பாஷைகள் (குணமாக்குதல் மற்றும் தீர்க்கதரிசனம் போலல்லாமல்) 1 கொரிந்தியரில் மட்டுமே கூறப்பட்டிருக்கிறது. கொரிந்தியருக்கு வரத்தின் தனித்து-வத்தை, பரிசீலிக்க மிகுந்த கவனம் தேவைப் படுகிறது. பவுல் நிருபங்களின் நவீன வாசகர்களாக, கொரிந்து-வில் "பற்பல" பாஷைகள் என்னவாக இருந்தது என்று ஓரளவுக்கு நாம் அவருடைய கற்பித்தலினாலே இலாபம் அடையலாம்.

புதிய ஏற்பாட்டின் வேறு பகுதியில், "பாஷை" என்ற வார்த்தை அப்போஸ்தலர் 2:7, 8; 10:46; மற்றும் 19:6ல் மட்டுமே தோன்றுகிறது. அப்போஸ்தலர் 2ல் அது அந்நிய பாஷையை தெளிவாகக் குறிப்பிடுகிறது. தெளிவான வசன பாகங்கள் மிக கடினமான ஒன்றை விக்கியானம் செய்ய உதவும் என்ற கோட்பாட்டை பயன்படுத்தி, நாம் "பற்பல பாஷைகளை" நடபடிகள், வேறெங்கிலும் மற்றும் 1 கொரிந்தியர் 12-14ல் பாஷைகளாக எடுக்க வேண்டும். எந்த விவரிப்பும் இல்லாமல், வாக்குவாதம் செய்ய, அப்போஸ்தலர் 2ல் பற்பல பாஷையின் வரங்கள் ஒரு சம்பவமாக இருந்தால், 1 கொரிந்தியரில் முற்றிலும் வேறுபட்ட விஷயமாக இருப்பதை புதிய

ஏற்பாட்டின் தெளிவாக சம்பாஷிப்பதின் திறமையை கேள்வி கேட்பதாக இருக்கிறது.[7] அந்நிய பாஷையானது “ஆவியானவரால் ஏவப்பட்ட பாஷையாக இருக்கிறது மற்றும் அறிவாற்றல் இல்லாத, பாஷையில்லாத வாய்மொழி அல்ல. புரியாத உளருதலல்ல” என்று பவுல் சரியாகவே புரிந்துகொண்டார் என்று David E. Garland சரியாகவே முடிவடையச் செய்தார்.[8]

Robert H. Gundryயின் ஒரு கட்டுரை “புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டுள்ள தெரியாத மொழியானது Hellenistic மதத்தில் காணப்பட்ட களிப்பூட்டும் பாஷையை போலவே இருக்கிறது மற்றும் பழைய உடன்படிக்கையின் தீர்க்கதரிசனமாக இருக்கும் சாத்தியங்களும் உண்டு” என்று பரிசீலிக்கிறது, அது சொல்லுவதாவது, “... அப்போஸ்தலன் பவுல் சம்பவத்தை களிப்பூட்டும் வாய்மொழியாக, பார்ப்பதில்லை அல்லது விவரிப்பதில்லை, ஆனால், பேசுபவருக்கு அநியாயமாக இருக்கும் மனித பாஷையை பேசும், அற்புதமாக கொடுக்கப்பட்ட திறமையாக இருக்கிறது.”[9]

**வசனம் 11.** கொரிந்து சபையில் பிரசித்தி பெற்றிருந்த வரங்களைக் குறித்த பவுலின் சுருக்கத்தில் கிறிஸ்துவின் சரீரத்தின் ஒற்றுமையை பெரிதாக பிணைக்கப்படுகிறது. அவர் எழுதினது, இவைகளையெல்லாம் அந்த **ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்துகொடுக்கிறார்.** கிறிஸ்தவர்களுக்கு அதிகப் படியான வரங்களை நாடுவதின் போட்டியானது, பகிர்ந்தளிக்கப்பட்ட ஆவியின் திறமைகளை அவர்கள் தவறாக புரிந்துக் கொண்டார்கள் மற்றும் தவறாக பயன் படுத்தினார்கள் என்ற அறிகுறியை காட்டினது.

சரீரத்தின் வெவ்வேறு அவயவங்களுக்கும், சபை-களுக்கும், வெவ்வேறான திறமைகள் உள்ளது என்ற உண்மை தேவையான சரீரத்தின் ஐக்கியத்தை குறைத்துவிடுவதில்லை. சரீரத்தின் எல்லா அவயவங்களை போல சபையின் எல்லா அங்கத்தினரும் ஒன்றாக கிரியை செய்கிறது. கிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு அவயவம் விசேஷித்த திறமான ஆசீர்வதிக்கப்-பட்டால், முழு சரீரத்தின் கொண்டாடும் ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது.

## “சரீரம் ஒன்று” (12:12, 13)

**12எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்.**
**13நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே**

**ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப் பட்டோம்.**

**வசனம் 12.** 12:12ல் பவுல், 12:1-11ன் கூடுதலாக, “அந்த பிரகாரமாக சபை இருக்கிறது,” என்று சொல்லுவார் என்று நாம் எதிர்பார்க்கலாம். சபையின் ஐக்கியம் அப்போஸ்தலனின் முந்தின விவரணையை கட்டியது, ஆனால், இப்பொழுதோ அவன் வேறு திசையில் திரும்பினான். “அந்தபிரகாரமாக சபை இருக்கிறது,” என்று சொல்வதற்கு பதிலாக, அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார் என்று எழுதினார். கொரிந்துவில் சபையை நாட்ட ஒருவர் கிறிஸ்து மற்றும் அவருடைய சபையின் ஒற்றுமையை வலியுறுத்தினார். சரீரத்தின் அங்கமாக இருப்பது என்பது கிறிஸ்துவில் சேர்ந்திருப்பதேயாகும்.

பழங்கால கொரிந்துவின் மேற்கு சுவர்களில் குணப்படுத்தும் ஆலயம் இருக்கும் Asclepion தளத்தில், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இடைமாற்றில் terra-cottaசரீர உறுப்புகளைக் கண்டெடுத்திருக்கிறார்கள். தேவர்களில் தம் துயரத்தைக் காட்ட விரும்பின பக்தர்கள் அவைகளை அங்கு வைத்திருக்கலாம், அல்லது ஒரு வேளை அவர்கள் மூலமாக அவர் பெற்றுக்கொண்ட சுகத்திற்காக நன்றி சொல்ல விரும்பியிருக்கலாம். Terra-cottaசரீர உறுப்புகள், கொரிந்துவின் நவீன தொல்பொருள் இடத்தில் சிறிய அருங்காட்சியகத்தில் காட்சிப்பொருளாக வைக்கப்-பட்டிருக்கிறது. பவுல் இந்த ஆலயத்தை சந்தித்தான் மற்றும், மருந்துகளின் தேவனான Asclepiusஇன் பக்தர்கள் விட்டிருந்த பல்வேறுபட்ட சித்திரங்களைப் பார்த்திருப்பான் என்று யூகிப்பது கடினமானதல்ல. Jerome Murphy-O’Connor யூகித்தது,

> இந்த பின்னிலையின் எதிர்மாறாக பவுல் துண்டிக்கப்பட்ட உறுப்புகளை Asclepionவில் கிறிஸ்தவர்கள் எப்படியெல்லாம் இருக்கக்கூடாது என்பதற்கு அடையாளங்களாய் பார்த்திருக்கக் கூடும்: “மரித்தவர்களாய்,” பிரிக்கப்பட்டவர்களாய், அன்பில்லாதவர்களாய் மற்றும் அன்பைப் பெறாதவர்களாய். இதிலிருந்து, ஒவ்வொரு அவயவங்களின் விரிவான அடையாளம் ஒரு பகிர்ந்து கொள்ளப்பட்ட வாழ்வில் இருக்கும் முழு சரீரத்தின் சித்திரத்தை ஒப்பிட்டு பார்ப்பது ஒரு எளிதான படியாக இருந்திருக்கலாம்.[10]

**வசனம் 13.** பவுல், அவருடைய வாசகர்களுக்கு அதிக கேள்விகளை வைத்தார். கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதில், மனிதனின் வேறுபாடுகளை முறித்து, இந்த சகோதரர்கள், ஆவியின் வரங்களின் அடிப்ப-டையில் சரீரத்தைப் பிரிக்க துணிவார்களா? **ஒரே ஆவியானவர் மற்றும் அவர்கள் ஒரே சரீரத்திற்குள்-ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டார்கள்** என்று அவர்களுக்குத் தெரியாதா? சரீரத்தின் அவயவங்கள் ஞானஸ்நானத்தில் விசுவாசத்தின் உச்சநிலையை அடைந்தது என்று

பவுல் சபையோடு வாக்குவாதம் செய்யும் அவசியம் இருந்ததில்லை. ஞானஸ்-நானமானது கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்வின் தொடக்கத்தைக் குறிப்பிட்டது மற்றும் இவ்வுலகத்தின் வாழ்விலிருந்து பிரித்தது என்று அவர்கள் அறிந்திருந்தார்கள். இதற்கு முன்பே அப்போஸ்தலன் சபை அங்கத்தினரை, புதிய பதிப்பின் தொகுப்பு களின்படி வாழச் சொல்லி கடிந்து கொள்ளும் பொருட்டு அதே போன்ற பிரிவுகளை (யூதன்/கிரேக்கன் [புறஜாதியார்], அடிமை/சுயாதீனன்) என்று பயன்படுத்தி இருந்தார் (7:18-24); இப்பொழுது அவர் அதை அங்கத்துவம் மற்றும் சரீரத்தில் பங்கு கொள்பவர் களுக்குப் பயன்படுத்தினார்.

12:13ல் பவுல் எல்லா கொரிந்தியரும் பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் பெற்றிருந்தார்கள் என்ற யோசனையை முறையீடு செய்து கொண்டிருந்தார் என்று ஒரு சிலர் சொல்லுகிறார்கள். உதாரணமாக, Jack Cottrell, ஞானஸ்நானத்தின் சமயத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் பெரும் பரிசுத்த ஆவியின் வரமானது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்று இந்த வசன பாகங்களிலிருந்து வாக்குவாதம் செய்தார். அப்போஸ்தலர் 1:4ன் வாக்குத்தத்தம் ("பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்") பேதுரு முதல் சுவிசேஷ பிரசங்கத்தை முடித்து ஜனங்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றபோது (அப். 2:38-41). நிறைவேறியது என்று சொன்னார். Cottrellன் படி பெந்தெகொஸ்தே நாளிலே அப்போஸ்தலருக்கு நடந்தது "பரிசுத்த ஆவியிலிருந்து" பெற்றுக்கொள்ளும் குறைந்த "வல்லமை"யாக (அப். 1:8).[11] இருந்தது. இந்த கருத்தின் ஆதரவாக, கொர்நேலியுவின் குடும்பத்தார் மீது பரிசுத்த ஆவியானவர் வருவது, பேதுருவுக்கு பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் உலகளவிலான வாக்குத்தத்தமானது, யோவான் ஸ்நானகனின் போதனையின் விஷயமாக இருந்ததை நினைவூட்டியிருக்கும் (அப். 11:15, 16).

பெந்தெகொஸ்தே நாளிலே, அப்போஸ்தலர்கள் மற்றும் கொர்நேலியு வீட்டிலே பகிர்ந்து கொண்ட அனுபவம், அடையாளங்கள் கூடிய பரிசுத்த ஆவி-யானவரின் வெளிப்பாட்டாக இருந்தது என்று Cottrell சொன்னார். அற்புத சம்பவத்தை, "பரிசுத்த ஆவியின் ஞானஸ்நான"த்திற்கு ஒப்பிடக்கூடாது என்று அவர் சொன்னார். Cottrell ஸ்தம்பிப்பவராக இருந்தார்; அதாவது, அப்போஸ்தல சபைக்குப் பின், சபையின் தனிப்பட்ட விசுவாசிகள், அவர்கள் விருப்பப்படி அற்புதங்களைச் செய்ய, தேவனுடைய வல்லமையால் அணிவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அவர் விசுவாசிப்பதில்லை. இருப்பினும், Cottrell கொடுத்த வழக்கு குறைந்த பட்சம் நான்கு எண்ணங்களில் தவறுகிறது.

முதலாவது, இயேசு தம்முடைய உயிர்த்தெழுதலுக்கு பின்

அப்போஸ்தலருக்கு தோன்றும் போது சொன்ன பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை குறித்து திட்டவட்டமாக சொன்னார். அது இந்த தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டத்திற்காக (அப். 1:2), "பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்" பெறும்வரை (அப். 1:5), அவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையை பெற்று அவருக்கு சாட்சிகளாக மாறும்வரை எருசலேமில் காத்திருக்கும்படி கட்டளையிட்டார் (அப். 1:8). பெந்தெகொஸ்தே நாளிலே, ஜனக் கூட்டம் பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு ஞானஸ்நானம் பெற்றபின் (அப். 2:41), அப்போஸ்தலர் 1:2-8ன் கட்டளை மட்டும் வாக்குத்தத்தம் நிறைவேறியது என்று சொல்லுவது மிஞ்சின வியாக்கியானமாக இருக்கும்.

இரண்டாவது, ஜலத்தினாலே ஞானஸ்நானம் 1 கொரிந்தியரில் சொல்லப்பட்டுள்ளது மற்றும் வேறு நிருபங்களிலும் தோன்றுகிறது. பவுல் கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு, "... ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்" (6:11) என்றார். அவர் ஞானஸ் நானத்தை, கழுவுவதாக குறிப்பிட்டார், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்கு பொருத்தப்படாத ஒரு சித்திரம். விசுவாசிகள் கழுவப்பட்டபோது, பரிசுத்தமாக்கப்பட்டார்கள், நீதிமான்களாக்கப் பட்டார்கள் என்று மட்டுமே அப்போஸ்தலன் சொல்லவில்லை, ஆனால், இந்த செயல்முறை "தேவனுடைய ஆவியினாலே" ஆனது என்றும் சுட்டிக்காட்டினார். அதேபோல், பவுல் சொன்னது, "மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதி தாக்குதலினாலும்" தேவன் தமது இரக்கத்தின்படியே "நம்மை இரட்சித்தார்" (தீத்து 3:5). கொரிந்து விசுவாசிகள் "ஒரே ஆவியினாலே" ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம் (1 கொரி. 12:13) என்று பவுல் சொன்னார், ஆனால், அவர் ஜலத்தினாலே ஞானஸ்நானத்திற்கு எதிர்மறையான பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் குறித்து பேசினார் எனபதற்கு எந்த ஒரு ஆதாரமும் இல்லை. சந்தர்ப்பசூழல் அப்படியாக கோரினால் மட்டுமே பவுலின் "ஞானஸ்நானம்" என்ற வார்த்தையை உருமாற்றமாக புரிந்து கொள்ள வேண்டும்.

மூன்றாவது, வியாக்கியானத்தின் காரியத்தில், புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் என்று குறிப்பிடும் போது, சாதாரணமான குறிப்பிடுதல் ஜலத்தின் ஞானஸ்நானம் ஆகும். யோவான் ஸ்நானகன் நீரினாலே ஞானஸ்நானம் கொடுத்தார்; இயேசுவின் சீஷர்களும் அவ்வாறாகவே கொடுத்தார்கள் (யோவான் 4:1, 2). பிலிப்பு மற்றும் எத்தியோப்பியன் "தண்ணீருள்ள ஓரிடத்திற்கு," வந்தார்கள் மற்றும் சுவிசேஷகன் அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான் (அப். 8:36). அநேக வசன பாகங்கள் இந்த சத்தியத்தை போதிக்கிறது. 1 கொரிந்தியர் 12:13ல்

ஞானஸ்நானம் என்பது, நீரின் ஞானஸ்நானம் என்று தெளிவாக சொல்லுகிறது.

நான்காவது, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், புதிய ஏற்பாட்டில், யோவான் ஸ்நானகனின் வார்த்தையின் வாக்குத் தத்தம் மற்றும் அதனுடைய நிறைவேறுதலோடு தோன்றுகிறது (மத். 3:11; மாற்கு 1:8; லூக். 3:16; அப். 1:5; 11:16). இயேசுவானவர் தம்-முடைய சீஷர்களுக்கு, அவர் அவர்களுக்கு அக்கினியாலே ஞானஸ்நானம் கொடுத்த பின்பு பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. அப்போஸ்தலர் 11:15-17ல், புறஜாதியாருக்கு நீரின் ஞானஸ்-நானத்தை விலக்கக்கூடாது என்று பேதுரு விவரித்த நிகழ்ச்சி மட்டுமே ஒரு விதிவிலக்காக இருந்தது (அப். 10:47). கொர்நேலியு மற்றும் அவன் குடும்பத்தார் "இயேசு கிறிஸ்துவின நாமத்தினாலே" நீரின் ஞானஸ்நானம் பெற்றிருந்தார்கள் (அப். 10:48), அப்பொழுது மட்டுமே அவர்கள் கொரிந்து விசுவாசிகளைப் போல **ஒரே ஆவியை உட்கொள்ளும்படி** மாற்றப்பட்டார்கள். நீரினாலே ஞானஸ்நானம் பெற்ற பின்னரே அவர்கள் கழுவப்பட்டார்கள், பரிசுத்தமாக்கப்பட்டார்கள், மற்றும் நீதிமான்களாக்கப்பட்டார்கள். இல்லையேல், அவர்கள் நீரினாலே ஞானஸ்நானம் பெற்றது அர்த்தமற்றதாயிருக்கும்.

## "அநேக அவயவங்கள், ஆனால், ஒரே சரீரம்" (12:14-26)

ஆவியின் வரங்களை சித்தரித்து, "ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்-கென்று அளிக்கப்பட்டிருக் கிறது" (12:7) என்று அறிவித்-தபின், அடுத்ததாக பவுல், தான் சொன்னதைப் பற்றிய ஒரு சில நடைமுறை தாக்கங்களை வளர்த்தார். 12:12ல், அவர் சொல்லியது, "சரீரம் ஒன்று"; ஆனால், நம்முடைய சரீரத்தின்படியே சபையானது உத்தேச பூர்வமாக செயல்பட அநேக அவயவங்களின் கிரியை தேவைப்படுகிறது. கொரிந்துவின் கிறிஸ்தவர்கள், வரங்களை விரும்பத்தக்கது என்று கருதி, அதில் மட்டுமே கவனம் செலுத்தியபோது, அவர்கள் முழுசரீரத்தையும் குறைமதிப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். பட்டியலின் கீழ் பகுதியில் பற்பலப் பாஷைகளை பேசுவதை (12:10 வைத்ததில், அது ஒரு ஆவியின் சிறிய மானியம் என்று அவர் கருதவில்லை, காரணம் எந்த ஒரு மானியமும் சிறியதல்ல. கொரிந்துவில் சில பேர் அந்த வரத்தை உயர்ந்ததாக மதிப்பிட்டார்கள் என்று அவர் அறிவுறுத்தினார். சபை கட்டுவதற்காக ஆவியானவர் கொடுத் திருந்த வரங்களை கொரிந்தியர் மதிப்பிட்டுக் கொண்டிருந்தார்கள், மற்றும் இது சரீரத்தின் பிரிவினையை எடுத்துரைத்தது. பவுல் 1 கொரிந்தியரை எழுதுகையில், சரீரத்தின் ஒற்றுமை, அவருக்கு தூரமாக இருந்ததில்லை, ஆனால், அவருடைய சர்ச்சையில், எங்கேயும் சரீரத்தில் ஆவியின் வரங்களைக் குறித்த

சர்ச்சையை விட ஐக்கியத்தைக் குறித்து அவர் பாரப்பட்டது தெளிவாக இல்லை.

**[14]சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங் களாயிருக்கிறது. [15]காலானது நான் கையாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயமாயிராதோ? [16]காதானது நான் கண்ணாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ? [17]சரீரம் முழுவதும் கண்ணானால், செவி எங்கே? அது முழுவதும் செவியானால், மோப்பம் எங்கே? [18]தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். [19]அவையெல்லாம் ஒரே அவயவமாயிருந்தால், சரீரம் எங்கே? [20]அவயவங்கள் அநேகமாயிருந்தும் சரீரம் ஒன்றே. [21]கண்ணானது கையைப்பார்த்து: நீ எனக்கு வேண்டுவதில்லை யென்றும்; தலையானது கால்களை நோக்கி: நீங்கள் எனக்கு வேண்டுவதில்லையென்றும் சொல்லக்கூடாது. [22]சரீர அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது. [23]மேலும், சரீர அவயவங்களில் கனவீனமாய்க் காணப்படுகிறவைகளுக்கே அதிக கனத்தைக் கொடுக்கிறோம்; நம்மில் இலட்சணமில்லாதவைகளே அதிக அலங்காரம் பெறும்; [24]நம்மில் இலட்சணமுள்ளவைகளுக்கு அலங்கரிப்பு வேண்டியதில்லை. [25]சரீரத்திலே பிரிவினையுண்டா யிராமல், அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும் படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து, இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார். [26]ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும்.**

**வசனம் 14.** இந்த கிறிஸ்தவர்கள் ஒரே சரீரம் மற்றும் அதனுடைய **வெவ்வேறு** அவயவங்களைக் குறித்த குணாதிசயத்தைப் புரிந்துகொள்ள விரும்பி-னார்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனும், சபையை அமைத்த அவனுடைய அல்லது அவளுடைய அவயவத்தின் பரிபூரணத்தைப் புரிந்துக் கொள்ள வேண்டியது கிறிஸ்துவின் சரீரத்தின் நன்மைக்கு முக்கியமானதாக இருந்தது. சபையின் ஒவ்வொரு அங்கத்தினரும், அடுத்த கிறிஸ்தவர்கள் நிர்வகித்த பாத்திரத்தைப் புகழவேண்டியிருந்தது; மற்றும் தருணத்தின் உத்தரவாதத்தால், ஒருவர் மற்றவர்களை தாமதப்படுத்த வேண்டியிருந்தது. முழுமையான நன்மைக்காக, கொரிந்தியர் பரஸ்பர அக்கறை என்னும் கருத்தைத் தழுவவேண்டியது அதி முக்கியமான ஒன்றாக இருந்தது, யாரும் ஆதிக்கம் செலுத்தக் கூடாது;

எல்லோருக்கும் செய்யவேண்டிய ஒரு சில பங்களிப்பு இருந்தது. கிறிஸ்தவர்கள் ஒருவரோடொருவர் போட்டியிடவில்லை. ஒரு விசுவாசியின் ஆசீர்வாதமே எல்லோருடைய ஆசீர்வாதமாக இருந்தது.

கிரேக்கரோம சமுதாயத்தில் பொருளாதாரத்தில் சலுகை பெற்றவர்களின் எண்ணம், குடிமக்கள் வளம்பெற்றால், அதனுடைய ஆதாயம் எல்லோருக்கும் துளித்துளியாய் எல்லோருக்கும் சேர்ந்தது. இயேசுவின் பிறப்பின் சமீப காலத்தில், ரோம வரலாற்றாசிரியர் Livy (கி.மு. 59-17) ஒரு ரோம அதிகார சபை அங்கத்தினர், சொன்ன ரோமில் சிறந்தவர்களின் உரிமையை நியாயப்படுத்தும்படியான ஒரு கட்டு-கதைக்கு சம்பந்தப்படுத்தினார்:

> இப்பொழுது இருப்பது போலவே, மனிதர்களின் சொந்த அங்கத்தினருக்கு இடையில் கருத்து வேறுபாடு இருந்த சமயத்தில், ஆனால், அவர்களுக்கு என்று தனிப்பட்ட கருத்துக்கள் மற்றும் அதற்கான சொந்த குரல் இருந்தபோது, வேறு அங்கத்தினர், தங்களுக்கு கவலை மற்றும் பிரச்சனை மற்றும் வயிற்றுக்கு கொடுக்க எல்லா பிரயாசங்களும் படவேண்டியதாயிருக்கு, ஆனால், வயிறானது அவர்கள் நடுவில், தன் மேல் வைத்திருந்த எல்லா நன்மைகளை தவிர வேறொன்றும் செய்யாமலே இருக்க வேண்டும் என்று நினைத்தார்கள்; ஆதலால், அவர்கள், ஒன்று கூடி, கையானது வாய்க்குள் உணவை கொண்டு போகக்கூடாது, மற்றும் வாயானது தனக்கு கொடுக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ளக் கூடாது, மற்றும் பற்கள் கொடுக்கப்ட்டதை மெல்லக்கூடாது என்ற கட்டுப்பாடு பண்ணி-னார்கள். இவ்வாறாக அவர்கள் கோபதாபங்கள் கொண்டு வயிறு கட்டுப்படும் வரை பசியில் தவிக்க வேண்டும் என்று முடிவெடுத்தபோது, அங்கத்தினர் மற்றும் முழு சரீரமும் பெலவீனப்-பட்டு மெலிந்து போனது. ஆதலால், வயிற்றிற்கும் செய்ய எந்த வேலையும் இல்லை, மற்றும் அது நாம் ஜீவிக்கும் மற்றும் செழித்தோங்க எல்லா அவயவங்களுக்குக் கொடுத்துப் போஷித்ததைப் போல, இப்பொழுது அளிக்கவில்லை, மற்றும் அதற்கும் எந்த ஒரு போஷாக்கும் இல்லை ...[12]

பொருளாதார பகுதியில் வரலாற்றாசிரியரின் வாக்குவாதத்தின் செல்லுபடி நிலை கேள்விக்குறியாக இருக்கிறது, ஆனால், தேவன் தனிப்பட்ட நபருக்கு கொடுக்கும் வரங்களால் முழு சபை என்னும் சரீரமும் பிரயோஜனப்படுகிறது என்பது உண்மை. பவுல், Livy கொடுத்த வாக்குவாதத்திற்கு அறிமுகம் இல்லாமல் இருக்கலாம் அல்லது இருந்திருக்கலாம், ஆனால், கிரேக்க-ரோம உலகத்தில் முழுமையான முழு சரீரத்தின் சமுதாய நன்மை மற்றும் முன்னேற்றத்திற்கு சரீரத்தின் அவயவங்கள் செயல்படுவதை உபயோகிப்பது சாதாரணமாக இருந்தது.

**வசனம் 15.** தொடர்ந்து கவனிக்கையில், பவுல் பரஸ்பர தேவை மற்றும் பிரயோஜனத்தின் சத்தியத்தை வலியுறுத்தினான். காலின் கிரியை **கையின்** கிரியையை விட முக்கியமானது அல்ல, ஆனால்,

இரண்டும் அவசியமாக இருக்கிறது. காலானது, **நான் சரீரத்தின் அவயவமல்லவென்று**, தீர்மானித்தால், சரீரத்திற்கு அதனுடைய பங்களிப்பு மங்கிவிடுவதில்லை. கால் மற்றும் கையின் மதிப்பீட்டை தரப்படுத்துவது சாத்தியமும் அல்ல மற்றும் விரும்பத்தக்கதும் இல்லை. ஒரு கிரியையின் உபயோகம் அது தோன்றுவது போல இல்லை என்பது நிச்சயமே. சரீரத்தின் ஒரு அவயவம் - இந்த சூழ்நிலையில், கால் - அதனுடைய கிரியைக்கு தக்க அங்கீகாரத்தை பெறவில்லை என்று விசுவாசிக்கும் போது பிரச்சனை தொடங்குகிறது. அப்போஸ்தலனின் செய்தி கூறுதல் தெளிவாகவே இருக்கிறது: ஒரு சரீரத்தின் அங்கத்துக்கு, அது சரீரத்திற்கு முழுமையாக பிரிக்கப்படாதபடி கட்டப்பட்டிருக்கிறது என்று மறந்துவிட்டு தன்னுடைய சொந்த பிரயோஜனத்தை நாடுவது முட்டாள்தனத்தின் உச்சகட்டமாக இருக்கும். முழு சரீரத்தை விட்டு எந்த ஒரு அவயவமும் தானாக செழித்தோங்க முடியாது.

கொரிந்து சபையில் சின்ன சின்ன பொறாமைகளுக்கும் மற்றும் பிரிவினைகளுக்கும் பவுலின் வாக்குவாதம் ஒரு மறுஉத்தரவாக இருந்தது. அதிகமாக தென்படுகிற ஆவியின் வரங்களைக் கொண்டவர்கள், குறைந்த பட்சம் தென்படும் வரங்-களைக் கொண்டவர்களை, அதின் விளைவு சிறியதாக இருக்கிறது என்று சொல்லி அகற்றக்கூடாது. மாறாக, பொது ஜனங்களைக் கவர்ந்த குறைந்த வரங்கள் உடையவர்கள்அதிகமாக கவனம் ஈர்க்கக்கூடிய வரங்களுக்கு பேராசை படக்கூடாது.

**வசனம் 16.** அப்போஸ்தலனின் முதலாவது ஒப்புமையாவது கால் மற்றும் கையை அடுத்தடுத்து வைக்கிறது; இரண்டாவது இரண்டு உணர்வு உறுப்புகளின் மீது கவனம் செலுத்துகிறது, காது மற்றும் கண், சரீரத்தின் அவயவங்களின் ஒன்றுக்கொன்று சார்ந்து கொள்ளுதலின் வகையை போல, அப்போஸ்தலன் வேறுபடுத்த முயற்சிக்கவில்லை. சபையின் நல்வாழ்வு, சபையைச் சேர்ந்த தனிப்பட்ட நபரோடு ஒப்பிடப்படுகிறது என்று நிரூபித்துக் கொண்டிருந்தார். பிறகு ஒப்பிடுதல் செய்யப்பட்டது (12:21); ஆனால் இந்த தருணத்தில், கால் மற்றும் காதானது தங்களின் சார்ந்துக் கொள்ளுதலை குறித்து உறுதியாக கூறுவதை பவுல் இங்கு சித்தரித்தார். விளக்கத்தில், காலுக்கு கை செய்யும் வேலையை குறித்த எந்த ஒரு அக்கறை அல்லது புகழ்ச்சி இல்லாதது போல் காட்டுகிறது, அல்லது காதுக்கும் கண்ணைக் குறித்து அப்படியாக இல்லாமல் இருக்கிறது.

அப்போஸ்தலனின் ஒப்புமையில், கால் மற்றும் காதானது, முழு சரீரத்திலிருந்தும் அவர்கள் கொடுக்-கிறார்கள் மற்றும் பெற்றுக் கொள்ளுகிறார்கள் என்ற நினைவு அல்லது அக்கறையில்லாமல், தங்கள் சொந்த உலகத்தில் இருக்கிறார்கள். தனியுரிமைக் கோட்பாடானது, எல்லையை சீரமைத்துக் கொண்டிருக்கும் ஒருவரின்

நல்லொழுக்கமாக இருக்கிறது. ஆனால், அது தங்களுடைய ஆவிக்குரிய, உணர்வு பூர்வ, மற்றும் சரீரத்தின் செழிப்பிற்க்காக ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் சமுதாயத்தின் ஜனங்களுக்கு அது சரிப்பட்டுவராது. கொரிந்துவில் ஆவிக்குரிய வரங்கள் பெற்ற சகோதரர்களுக்கு, உருவகப்படுத்திய கால் மற்றும் காது, நிச்சயமாகவே உணர்வற்ற பிரதிநிதிகளாக இருக்கிறார்கள்.

**வசனம் 17.** பவுலுக்கு காதை விட அதிகமாக, சரீரத்திற்கு கண்ணின் பங்களிப்பை பாராட்டுவதில் எந்த ஒரு ஆர்வமும் இருந்ததில்லை. எல்லா அவயவங்களின் உள்ளீடு இல்லாமல் எந்த ஒரு சரீரத்தின் அவயவமோ செயல்பட முடியாது. **சரீரம் முழுவதும் கண்ணானால், செவி எங்கே?** என்று அப்போஸ்தலன் கேட்கிறார். அவர், கண் அல்லது காது; கை அல்லது கால், எவை சரீரத்திற்கு முழுவதுமாக பங்களிக்கிறது என்ற சர்ச்சைக்கு ஈர்க்-கப்படாமல் இருக்க எச்சரிக்கையாக இருந்ததாக தோன்றுகிறது.

பவுல் தன்னுடைய ஒப்புமையில் என்ன சொல்ல வந்தார் என்பதில் கொரிந்தியருக்கு நிச்சயமாகவே எந்த ஒரு சந்தேகமும் இருந்ததில்லை. இயேசுவின் உவமையில் அதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் எப்படியாக பிடிபட்டார்களோ, அப்படியே, அவர்கள் அதை உணருவதற்கு முன்பே ஒரு சில ஒப்பீடுகளைச் செய்ய ஆரம்பித்திருந்தனர். “சபையின் அங்கத்தினர் எல்லோரும் ஏழைக்கு உணவு கொடுத்து, ஆனால், விசுவாசத்தில் பெலவீனப்பட்டவர்களை போஷிக்காமல் இருந்தால் எப்படியாக இருக்கும்?” என்ற கேள்விகளை பவுல் அவர்களிடம் கேட்க விரும்பினார். சரீரம், அதனுடைய வெவ்வேறு அவயவங்களின் பங்களிப்புக்கு ஏற்ற தகுதியை கொடுத்தால், அது எல்லா அங்கத்தினருக்கும் உபகாரமாக இருக்கும். எல்லோரும் ஒரே மாதிரியான திறமைகள், ஆர்வங்கள், மற்றும் அனுபவங்களை கொண்டவர்களாக இருந்தால் சபையின் சரீரம் எவ்வளவு படுமோசமாக இருக்கும்.

**வசனம் 18.** மற்றவர்களின் பங்களிப்பிற்கு, எந்த விசுவாசியாவது புகழத்தவறினால், அவன் தேவன் தம் சித்தத்தின் படி தாலந்துகளை பகிர்ந்தளிப்பதை பிரதி-பலிக்க வேண்டும். அங்கத்தினருக்கு சரீரத்தில் மற்றும் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமான சபையில், வெவ்வேறு பாத்திரத்தை கொடுப்பது அவரே. தேவன் ... **அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்.** அப்படியிருக்க, எல்லா கிறிஸ்தவர்களும் அவர்கள் யாராக இருக்கிறார்கள் மற்றும் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை கனப்படுத்த வேண்டும். எவ்வளவு பெரிதாயினும், சிறிதாயினும், ஒவ்வொரு பங்களிப்பும் கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டி எழுப்புவதில் முக்கியமானதாக இருக்கிறது. வரமானது, மற்றவர்களின் கிரயத்தில், ஒரு அங்கத்தினன் ஆக்கிரமிப்பதற்காக அல்ல. பரிசுத்த ஆவியானவர் தெய்வீகத்தின் ஒரு

அங்கம் என்று விவரிக்க அவசியமிருந்ததாக அப்போஸ்தலனுக்கு தோன்றவில்லை; முன்பு ஆவியானவருக்கு புனைக்கப்பட்ட வரங்கள், இந்த வசனத்தில் தேவனுக்கு சாட்டப்பட்டது.

**வசனம் 19.** கொரிந்துவில் கிறிஸ்தவன் தன்னுடைய கிரியை எவ்வளவு முக்கியமாக கருதி-னாலும், தன்னைப் போலவே எல்லோரும் இருக்கும் ஒரு சபை இருக்கும் தோற்றத்தை பிரதிபலிக்க வேண்டியிருந்தது. ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஆவியானவரால் ஒரே வகையான வரம் இருந்திருந்தால், **சரீரம் எங்கே?** என்று பவுல் கேட்டார். வெவ்வேறு கிரியை செய்யும் வெவ்வேறு அங்கத்தினர் இல்லாமல் இருந்தால், அங்கு ஒரு சரீரம் இருக்காது.

கொரிந்தின் கிறிஸ்தவர்கள், தாங்கள் ஆவிக்குரிய ஜனங்களாக இருப்பதினாலே வெளிப்படையான பெருமை பாராட்டினார்கள், ஆனால், பவுல், ஆவிக்குரியவனாக இருப்பது என்றால் என்ன என்ற அவர்களின் அர்த்தத்தை ஒப்புக்கொள்ளவில்லை. அவர்கள் தேவனுக்கு பிரியமான ஜனங்கள் என்று காட்ட அவர்களுடைய அறிவை சாட்சியாக சுட்டிக் காட்டினார்கள். அவர்களுடைய ஞானம், ஒரு சிலரை சந்நியாச கொள்கையை ஏற்றுக் கொள்ளும் படியாக தூண்டிவிட்டது. “ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது” (7:1) என்று கூறினார்கள். வேறு சிலர் அவர்களுடைய சிறந்த அறிவு, அவர்களுடைய கேள்விக்குறியாக இருக்கும் நடத்தையில், மற்றும் சுய நுகர்விலும் சகிப்புத்தன்மை சாட்சி கொடுக்கிறது என்று சொன்னார்கள் (5:1, 2). அப்போஸ்தலன் இந்த ஜனங்களுக்கு சவால் விட்டார்: அறிவு இருப்பது ஆவிக்குரிய உத்தரவாதத்தை கொடுப்பதில்லை; பதிலாக, அவர்களுடைய நடத்தை அவர்கள் தேவனுக்கு பிரியமில்லாதவர்கள் என்று காட்டினது.

அவர்கள், ஆவிக்குரியவர்களாக இருந்தார்கள் என்பதற்கு இரண்டாவது அடையாளம், அவர்கள் பெற்றிருந்த ஆவியின் வரங்கள் என்று கொரிந்தியர் விசுவாசித்தார்கள். 12 முதல் 14 வரையிலான, அதிகாரங்களில், அவர்களின் எண்ணத்தில், எது சிறந்த ஆவியின் வரங்களை அமைத்தது என்று பவுல் அவர்களைக் கேட்டார். அவர்கள் எல்லா வரங்களைக் காட்டிலும் பற்பல பாஷையை அதிக மதிப்பிட்டார்கள்; ஆனால், 12:8-10ல், ஆவியின் வரங்-களின் பட்டியலில், பற்பல பாஷைகள் கடைசியில் வருகிறது. ஆவிக்குரியவர்களாய் இருக்கும் அவர்களின் எண்ணத்தை பவுல் சீர்திருத்த விரும்பினார்; உண்மையான ஆன்மீகத்திற்கு, அன்பு நிறைந்த ஜனங்களாய் இருப்பதே ஒரு சிறந்த வழி என்று அவர் குறிப்பிட்டார். சரீரத்தின் ஒற்றுமையை காத்துக்-கொள்ள, உண்மையாகவே ஆன்மீகமாக இருக்க, தாழ்மை தேவைப்பட்டது, அறிவல்ல; சகோதரர்கள் பற்பல பாஷை மற்றும் அற்புத சக்திகளைவிட அன்பிற்கு அதிக மதிப்பிட அது சகோதரரிடத்தில் கோரினது.

**வசனம் 20.** பவுலின் இந்த உருவகத்தின் பயன்படுத்துதல் உள்ளடக்கம் கொண்டதாக இருக்-கிறது. வாஸ்தவமோ அல்லது ஆன்மீகமோ, சரீரங்கள் அநேக அவயவங்களால் செய்யப்-பட்டுள்ளது. ஒவ்வொரு அவயவமும் முழு சரீரத்தின் பிரயோஜனத்திற்காக செயல்படுகிறது. ஒரு சரீரம் அல்லது ஒரு சபையானது வேறு எந்த வகையிலும் செயல்பட முடியாது, காரணம், தேவன் **அவயவங்கள் அநேகமாயிருந்தும் சரீரம் ஒன்றேயாக** இருக்க வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறார்.

முதலாம் ஆண்டின் ஸ்தொயிக்க தத்துவஞானி, அகன்ற மனித குடும்பத்தில், தனிப்பட்ட நபர் பங்கேற்-கின்றனர் என்று வாதாடுவதில் அதே அம்சத்தை சொன்னார். "நீ என்னவாக இருக்கிறாய்?" என்று அவர் கேட்டார், மற்றும் அவர் இந்த பதிலைக் கொடுத்தார்:

> ஒரு மனுஷன். நீங்கள் விலக்கப்பட்டவர்களாக நீங்களாகவே நினைத்தால், இயற்கையாகவே, நீங்கள் வயது முதிர்ந்தவரை, பணக்காரனாக, ஆரோக்கியத்தை அனுபவித்தவர்களாக வாழ-லாம். ஆனால், நீங்கள் உங்களை ஒருமுழு சரீரத்தின் ஒரு அங்கமாக நினைத்தால், அந்த முழுமைக்காகவே, இப்பொழுது நீங்கள் வியாதிப்-பட, கடல்பிரயாணம் செய்ய மற்றும் ஓடி வருத்திக் கொள்ள, மற்றும் தேவைப்படுகிற-வர்களாக இருக்க, மற்றும் சில நேரங்களில் காலத்திற்கு முன்பே சாக தகுந்தவாறு இருப்பீர்-கள். அப்படியானால், ஏன் நீங்கள் சோர்ந்து போயிருக்கிறீர்கள்? காலைப் போலவே, நாம் பிரிக்கப்பட்டால், அது இன்னும் காலாக இருக்காது என்று நீங்கள் அறியீர்களா? ஆதலால் நீங்களும், பிரிக்கப்பட்டால், ஒரு மனிதனாக இருக்க மாட்டீர்கள்? மனிதன் என்றால் என்ன? ஒரு நிலையின் ஒரு பங்கு; தேவர்கள் மற்றும் மனிதர்-களால் செய்யப்பட்ட நிலை, பிறகு மற்றவர்-களுக்கு மிக அருகாமையில் இருக்கும் நிலை, உலகளாவிய நிலையின் ஒரு சின்ன பிரதி … சரியே, இப்பொழுது வேறொருவர் அந்த வியாதிக்கு பெலவீனப்பட்டிருக்க, மற்றவர்கள் பிரயாணம் போக, மற்றவர்கள் மரிக்க, மற்றவர்கள் தூஷிக்கப்பட அனுமதிப்பீர்களா? நம்மைப் போன்ற சரீரம் உடையவர்களுக்கு, நம்மைச் சூழ்ந்துகொள்ளும், நம்முடைய உடன் உயிரினங்கள் நடுவில், அது அசாத்தியமான காரியம், அப்பேர்ப்பட்ட ஒன்று, ஒரு மனிதனுக்கு ஒன்று மற்றும் வேறொருவனுக்கு வேறொன்று என்பது நடக்கக்கூடாது.[13]

**வசனம் 21.** இந்த அம்சத்தில், பவுல் சரீரத்தில் பிரிவினையை வலியுறுத்தினார். சரீரத்தின் ஒவ்வொரு அவயவமும் அது சரியாக இயங்க வேறு உறுப்புகளை சார்ந்திருக்கிறது. ஆவியானவர் தாம் விரும்பினபடி வெவ்வேறு வரங்களைக் கொடுக்கிறார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவன் அல்லது அவளுடைய சொந்த வழியிலே சபையின் தேவைகளுக்கு பங்களிக்கிறான். காலுக்கு கை மற்றும் காதுக்கு கண், தேவையாக இருப்பது போல, முழு சரீரத்தின் பிரயோஜனத்திற்கு சகோதரர்கள் ஒருவரையொருவர்

சார்ந்திருக்கிறார்கள். **நீ எனக்கு வேண்டுவதில்லையென்ற**, நேர் மறையானது, அப்போஸ்தலனின் முந்தின கடிந்துகொள்ளுதலில் உள்ளடங்கியிருந்திருந்தால், அதை அவர் 12:21ல் வெளிப்படையாக்கினார். எந்த கிறிஸ்தவனுக்கும், சரீரத்தின் மற்றவர்களின் கிரியையை அல்லது நிகழ்வுகளை சிறுமைப்படுத்தும் அதிகாரம் இல்லை, ஏனெனில் தன்னை விட அவர்களுடைய பங்களிப்பு வித்தியாசமாக இருக்கிறது.

ஏற்கனவே, கண், காது, கால், மற்றும் கை, பவுலின் உத்தேசத்தை, அவர் அவயவங்களின் பரஸ்பர சார்ந்தலைப் பற்றி வாதாடும்போது பூர்த்தி செய்திருந்தது. இந்த சரீரத்தின் அவயவங்கள், வெவ்வேறு வரங்களைப் பெற்றிருந்த தனிப்பட்ட கிறிஸ்தவர்களுக்காக நிற்கவே பட்டியலிடப்பட்டிருந்தது (12:15, 16). அப்போஸ்தலன் உவமையை ஒரு புதிய திசைக்கு திருப்பிக் கொண்டிருந்தார். அதிகப்படியாக விரும்பத்தக்க வரங்களைப் பெற்றிருந்தவர்கள், அத்தகையை வரம் இல்லாதவர்களை அலட்சியமாகப் பார்த்தார்கள். அவர்கள் தங்கள் வரங்கள் சிறந்தது என்று பகட்டாக இருந்தது மட்டுமல்லாமல், அதை பெற்றிருக்கிற படியால் அவர்களையே சிறந்தவர்களாக யூகித்தார்கள். சிறிய வரங்களைப் பெற்ற அல்லது எந்த ஒரு அற்புத வரங்களும் இல்லாதவர்களின் அவசியம் அவர்களுக்கு இல்லை என்று நினைத்தார்கள். விலைமதிப்புள்ள ஆவியின் வரங்களைப் பெற்ற அவர்களின் மேன்மையின் உணர்வை, ஐக்கிய உணவின்போது, பொருளாதாரத்தில் செழிப்பாக இருந்த கிறிஸ்தவர்கள் ஏழைகளிலிருந்து தங்களை பிரித்துக் கொண்டதற்கு ஒப்பாக இருக்கிறது (11:20, 21). இரண்டு விஷயத்திலும், சரீரத்தின் ஐக்கியமானது களங்கம் அடைந்தது.

பவுல் உரையாற்றின பழங்கால சபையில் இருந்தது போல, இன்றைய நாளின் சபையில், பார்க்க சிறியதாக இருக்கும் பாத்திரத்தை வகிப்பவர்கள், அவர்களின் வேலை சிறிய விளைவை மட்டுமே கொடுக்கிறது என்று நினைத்து மனமுடிவடையலாம். சரீரத்தின் பிரயோஜனத்திற்கு, ஒவ்வொரு அங்கத்தினரும் முக்கியமானவர்கள் என்று பவுல் உறுதியளித்தார். வேறு காரியங்களில், சபையில் உயர்ந்த வேலையிலிருக்கும் ஒரு கிறிஸ்தவன், சிறிதே கவனத்தை ஈர்க்கும் வேலை செய்பவர்களுக்கு சிறியதே கனத்தைக் கொடுக்கலாம். பவுல் கொரிந்தியரை அவர்களுடைய வேலையே புதிய வெளிச்சத்-தில் பார்க்கும்படி அழைத்தான். இராஜ்ஜியத்தில் அவர்களுடைய வெற்றி சாத்தியமானது காரணம் மற்றவர்கள் சரீரத்தின் பிரயோஜனத்திற்காக தடையில்லாமல் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

**வசனம் 22.** சரீர அவயவங்களில் **பலவீனமுள்ள-வைகளாய்க்** காணப்படுகிறவைகள், அதாவது மௌனமாக மற்றும் தானாகவே செய்பவர்கள் வெளிப்படையாகவே சிறிதே கவனிக்கத்தக்கவர்-களாக

இருக்கிறார்கள். சரீர ஒப்புமையைத் தொடர்ந்து, ஒரு வேளை, அப்போஸ்தலனுக்கு தன் மனதில் உள் உறுப்புகளான இதயம், நுரையீரல்கள், அல்லது சிறு-நீரகங்கள் இருந்திருக்கலாம். இவைகள் இல்லாமல், சரீரம் மடிந்துவிடும்; ஆனாலும் அவயவங்களின் செயல்பாட்டிற்கு கை, கண் அல்லது மூளையின் பங்கில் எந்த ஒரு விழிப்புடைய முயற்சிகளும் தேவையில்லை. உணர்வு உறுப்புகள் சரீரத்திற்கு செய்தி அனுப்ப அல்லது தசைகள் அதை ஒரு அர்த்தமுள்ள மறுஉத்தரவாக மாற்ற, அவைகளுடைய சரியான **செயல்பாடுகள் அவசியம்** இருக்கிறது. "நீ எனக்கு வேண்டுவதில்லையென்று," சொல்ல முடிவதை விட, சரீரமானது அதனுடைய சிறியதாக கவனிக்கக்கூடிய அவயவங்களில் அதிகம் சார்ந்திருக்கிறது. அதேபோல், கர்த்தருடைய ஜனங்களின் சரீரத்தில், எதிர்பார்க்கத்தக்கதாக, தடையில்லாத முறையில் பிரயாசப்பட்டு பங்களிப்பவர்கள் ஈடு செய்ய முடியாதவர்களாக இருக்கிறார்கள். தனிப்பட்ட அங்கீகாரத்தை விட சரீரத்தின் சுகமே முக்கியமானது என்று நினைத்து சபையின் ஒவ்வொரு அவயவமும் திறம்பட செய்கிறது.

**வசனம் 23.** உடற்கூறியலின் ஒரு சில அவயவங்கள் அத்தியாவசிய கிரியையை கொண்டுள்ளது ஆனால், சாதாரணமாக, கண்ணியமான சம்பாஷனைக்கு தலைப்பல்ல. அவைகள் சிறிதே கனம்பெற்றதாய் கருதப்படுகிறது காரணம் அவைகள் சரீரத்தின் தேவையை ஏகாந்தமான, தனிப்பட்ட முறையில் சந்திக்கிறது. உடலின் தேவைகளை தனிப்பட்ட, தனிப்பட்ட வழிகளில் வழங்குவதால் மட்டுமே இவை **குறைந்த மரியாதைக்குரியவை** என்று கருதப்படுகின்றன. ஜனங்கள், இந்த சரீரத்தின் உறுப்புகளை விசேஷித்த முறையில் மூடுவதின் மூலமாக அவைகளுக்கு **ஏராளமான கனத்தை** பொழிகிறார்கள். ஆதலால், நம்முடைய சிறிதே கண்ணியமான அவயவங்கள் அதிக **கனம்பெற்றவர்களாக** மாறுகிறது. ஆகையால், எங்கள் **குறைவான அவயவங்கள்** மிகவும் **வழங்கத்தக்கவர்களாக மாறுகிறார்கள்.** பவுலின் நிருபத்தை எச்சரிக்கையாக படித்த கொரிந்தியர், வாசகம் முழுவதிலும் பவுல் வலியுறுத்தின ஒரு தலைப்பை கவனித்திருக்கக் கூடும்: "ஞானிகளை வெட்கப்-படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார்" (1:27; காண்க 2:3; 4:10; 9:22).

பவுல் தொடர்ந்து, சரீரத்தின் கவனிக்கக்கூடிய அம்சங்கள் மற்றும் ஆவிக்குரிய சரீரத்தில் வெவ்வேறு ஜனங்கள் அல்லது பலவகையான ஜனங்களை ஒப்பிட்டுப் பார்த்தார். நிச்சயமாகவே, அவருடைய விசாரம், ஐக்கியம், ஒட்டுந்தன்மை, நல்லெண்ணம் மற்றும் சபையில் ஒழுங்கு கிரமமான கிரியைகளைக் கொண்டு இருந்தது. அந்த

காரணத்திற்காக, சபையின் "சிறிதே கவனிக்கக் கூடிய அவயவங்களை," அவர்களுடைய விலைமதிப்புள்ள சேவை கர்த்தருக்கு செய்கிறார்கள் என்று அறிந்து, தொடர்ந்து சரீரத்திற்குப் பங்களிக்கும்படி பவுலின் அடுத்த கடிந்துகொள்ளும் வார்த்தையாக இருக்கும் என்று வாசகர்கள் எதிர்பார்க்கலாம். ஒருவேளை, கர்த்தர் அவர்களின் சேவையை மனதில் வைத்திருக்கிறார் என்ற மறு உறுதி அளிப்பார் என்று சிலர் எதிர்பார்க்கலாம். மாறாக, அப்போஸ்தலன், அதிக மதிப்புள்ள வரங்களைக் கொண்டவர்கள் சிறிதே கவனிக்கப் படுபவர்களுக்கு "ஏராளமான கனத்தைக் கொடுக்கும்படி" ஊக்குவிக்கிறது.

**வசனம் 24.** ஜனங்கள் அதிக கண்ணியமான அங்கத்தினருக்கு விசேஷித்த அலங்காரத்தை கொடுக்காமல், **சிறிதே கண்ணியமான அங்கத்தினருக்கு** கொடுக்கிறபடியால், சம்பந்தப்படுத்துவதில், சரீரத்தின் க்ஷேமத்தில், ஒருவரைக் காட்டிலும் மற்றொருவர் முக்கியமானவர் அல்ல. அதேபோல், அங்கீகாரம் இல்லாமல் சரீரத்தின் க்ஷேமத்திற்காக செயல்படும் அங்கத்தினரை தேவன் அதிக கனப்படுத்துகிறார். யாருடைய கிரியை எல்லோர் முன்பாகவும் வெளிப்பட்டதோ, அத்தகைய சரீரத்தின் அங்கத்தினரை கீழாகப் பார்க்க பவுல் விரும்பவில்லை. மற்றவர்களின் கிரயத்தில் ஒரு சிலரை இடித்துவிட அவர் விரும்பவில்லை; எல்லா அங்கத்தினரையும் ஒன்றாகவே உயர்த்த நினைத்தார். ஒவ்வொரு சரீர அங்கத்தினருக்கு நிச்சயமாகவே மதிப்பு இருக்கிறது காரணம், எல்லோரும் தனிப்பட்ட முறையில் கனம்பெற வேண்டும் என்ற வகையில் **தேவன் சரீரத்தை அமைத்தார்** [an aorist of συγκεράννυμι, *sunkerannumi*, "ஏற்பாடு செய்வது" அல்லது "ஒன்று சேர்ப்பது"]. Leon Morris இவ்வாறு எழுதினார், "தேவனுடைய சரீரத்தின் அங்கத்தினரின் ஏற்பாடானது எல்லா மோதல்களையும் புறம்பே தள்ளிவிட்டு, எல்லோரையும் இசைவான ஒரு முழு சரீரமாக மாற்றுகிறது."[14] குறைந்தது, எல்லா அவயவங்களும் அப்படியாகத்தான் பணியாற்ற வேண்டும். தேவன் கிரமமாக வைத்திருந்த இசைவை கொரிந்தியர் தனிப்பட்ட கௌரவத்திற்காக, முட்டாள்தனமான கிரியைகளோடு கலந்தார்கள்.

**வசனம் 25.** இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு, அயர் லேண்டிலிருந்து ஐக்கிய நாட்டிற்கு சமீப காலமாக குடியேறியிருந்த மறுசீரமைப்பு ஊழியர் ஒருவர் கிறிஸ்துவின் சபையில் தென்படக்கூடிய ஐக்கியத்தோடு போராடினார்கள். ஒரு பிரிக்கப் பட்ட, சிறுகுழு பிரிவின் மறுசீரமைப்பை நாடினபோது, கிறிஸ்தவ ஐக்கியமானது அடைய ஒரு பெரிய இலக்கே அல்ல காரணம் அது அறிக்கை செய்யும் ஒரு சத்தியமாக இருக்கிறது என்பதை Thomas Campbell அறிந்து கொண்டார். கீழ்கண்டதை கவனிக்கையில், அவருடைய *Declaration and Address* (அறிக்கைமற்றும் உரையாடல்)ல் அவர் பதிமூன்று

கருத்தாக்கம் தொடங்கினார்,

> ... பூமியின் மேல் கிறிஸ்துவின் சபை அவசியமாக, திட்டமிட்டு, மற்றும் அரசியலமைப்பு-ரீதியில் ஒன்றாக இருக்கிறது; கிறிஸ்துவில் விசுவாசத்தை மற்றும் வசனத்தின்படி எல்லா காரியங்களிலும் அவருக்குக் கீழ்ப்படிய அறிக்கை செய்து, மற்றும் அவர்களுடைய நிதானம் மற்றும் நடத்தையில் அதே வெளிப்படுத்தும் எல்லா இடங்களிலும் இருக்கும் இவர்கள் அனைவரைத் தவிர; இவர்களைத் தவிர யாரும் உண்மையான மற்றும் சரியான கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட முடியாது.[15]

Campbellன் துணிச்சலான அறிக்கையோடு எந்த ஒரு வாக்குவாதமும் பவுலுக்கு இருந்திருக்காது. கிறிஸ்தவர்கள், ஒருவர் மீது ஒருவர் போதகராக இருக்கும் தேர்வை செய்வதே அல்லாமல் வேறெந்த காரணமும் இல்லாமல் சில நேரங்களில் கட்சிகளை அல்லது சிறுகுழுக்களை அமைத்தார்கள் என்று அப்போஸ்தலர் அறிந்திருந்தார். சமூக நிலை, செல்வம், அல்லது கற்றல், இவைகள் செயற்கை தடைகள் எழும்ப காரணமானது. கருத்து வேறுபாடு ஏற்படும்போது மற்றும் உண்மைத்தன்மை சூழப்பட்ட-போது அவ்வப்போது பிரிவினை என்பது அதின் விளைவாக இருந்தது. சபையானது அவசியம் ஒன்று என்று சொல்லும் வகையில் பாவம் மற்றும் பெருமையே பிரிவினைக்கு காரணமாக இருந்தது என்று பதிலளித்தார். ***சரீரத்திலே பிரிவினையுண்டாயிராதபடி*** தேவன் அதை வடிவமைத்திருக்கிறார். அப்போஸ்தலன் இந்த சரீரத்தின் வெவ்வேறு அவயவங்களை உருவகப்படுத்தி **ஒவ்வொரு கிறிஸ்தவனும் தங்கள் மீது அக்கறையுள்ளபடியே மற்றவர்கள் மீதும் அக்கறை இருக்கவேண்டும்** என்று சர்ச்சித்தார். தம்முடைய சபையான, தம் சரீரத்திற்கு தேவனுடைய திட்டமானது, ஒவ்வொரு அங்கத்தினரும் பெற்ற வரங்களின்படி ஒன்றாக செயல்பட்டு மற்றும் எல்லோரையும் அவர்களுடைய கிரியைகளுக்காக ஒருவரை யொருவர் கனப்படுத்தி மரியாதை செலுத்துவதற்காக ஒருவரோ டொருவர் நன்றாக பிணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதாகவே இருக்கிறது. பவுல் வாசகர்கள், பொறாமை, ஒப்புரவற்றதை நாடுவது, மற்றும் ஆவியின் அதிக கவனிக்கப்படக் கூடிய வரங்களை இச்சிப்பது சரியான கிறிஸ்தவ நடத்தையின் நோக்கத்திற்கு புறம்பே இருந்தது என்று கொள்ள வேண்டும்.

**வசனம் 26.** முழு சரீரத்தையும் தாக்காமல், எந்த ஒரு அவயவத்திற்கும் ஒன்றும் நேரிடுவதில்லை. ஒரு அங்கத்தை தாக்கும் பாடுகள் என்றால் முழு சரீரமும் பாடுபடுகிறது. ஒருவரின் சந்தோஷம் மற்றும் கொண்டாட்டம் சமுதாயத்தின் எழுச்சிக்கு காரணமாக இருக்கிறது (காண்க ரோமர் 12:15). கிறிஸ்தவர்கள் சந்தோஷப்படுகிறவர்களோடு சந்தோஷப்படுவதை

விட அழுகிறவர்களோடு அழுவது சுலபமாக இருந்தால் அவர்கள் கர்த்தருடைய குற்றம் சுமத்துதலிலிருந்து தப்புவார்கள். ஒரே சரீரத்தில் பகிர்ந்து கொள்ளுவதில், கிறிஸ்தவர்கள் ஆவியானவருடைய கூட்டமைப்பால் கட்டப்படுகிறார்கள். ஆவியின் வெவ்வேறு வரங்கள் பிரிவினைக்கு காரணமாக இருக்கக்கூடாது.

தனிப்பட்ட மேற்கு நாட்டு கலாச்சாரத்தில், கிறிஸ்தவம் ஒரு சமுதாய அனுபவம் என்று விசுவாசிகள், கற்றுக் கொள்ளுவதை விட அவர்-களுக்கு வேறெதுவும் முக்கியமானதாக இல்லை. சரீரத்தின் மூலமாக ஐக்கியம் வந்தாலே தவிர கிறிஸ்துவுக்குள் எந்த ஐக்கியமும் இருக்காது. இன்று ஆன்மீக ஜனங்கள், “கிறிஸ்து உங்கள் இரட்சகரா?” என்று கேட்டால், கர்த்தரோடு கூட ஒரு சாதாரணமான உறவை விட, ஒரு நெருங்கிய உறவை தூண்டுதலை உத்தேசிப்பார்கள். ஆகிலும், இரட்சிப்பை விரும்புகிறவர்கள் கீழ்ப்படிய, தேவன் குறிப்பான கட்டளைகளை கொடுத்திருக்கிறார். ஜனங்கள் சுவிசேஷ செய்தியை கேட்கவேண்டும், மற்றும் அதை விசுவாசிக்க வேண்டும், தனக்குள் பாவங்களுக்காக பட்சாதாபம் படவேண்டும், இயேசு கிறிஸ்துவே பாவ மன்னிப்பிற்காக இரத்தம் சிந்தின தேவனுடைய குமாரன் என்று அவர்கள் விசுவாசத்தை அறிக்கை செய்ய வேண்டும், பாவங்கள் மன்னிக்கப்பட கிறிஸ்துவில் ஞானஸ்நானம் பெற வேண்டும் (காண்க அப். 2:38; ரோமர் 10:8-10; 1 கொரி. 1:21) என்று சொல்லியிருக்கிறார். கிறிஸ்துவை சேவிப்பது என்பது இயேசுவை தங்கள் இருதயத்தில் அனுமதிப்பது மட்டுமே என்று எண்ணுபவர்கள் சபை மற்றும் மனித சரீரத்தின் பவுலின் ஒப்புமையை சற்றும் கவனித்து பார்க்க வேண்டும். இயேசு தம்மை ஒரு திராட்சை செடிக்கும் மற்றும் அவரை விசுவாசிப்பவர்-களை கிளைகளுக்கும் ஒப்பிட்டார். தனிப்பட்ட விசுவாசிகள் கிறிஸ்துவில் பங்கு கொள்ளாமல் நல்ல கனியைக் கொடுக்க முடியாது (யோவான் 15:1-11). அதேபோல், அவருடைய சரீரத்தில் அங்கத்துவம் இல்லாமல் தேவனுக்கு கனம் மற்றும் மகிமையை செலுத்த முடியாது.

## “முக்கியமான வரங்களை நாடுங்கள்” (12:27-31)

**27நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங் களாயுமிருக்கிறீர்கள். 28தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார் 29எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா? எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா? 30எல்லாரும் குணமாக்கும்**

**வரங்களுடையவர்களா? எல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா? [31]இப்படியிருக்க, முக்கியமான வரங்களை நாடுங்கள்; இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்.**

கிறிஸ்துவின் சரீரத்தில் ஐக்கியமானது தனிப்பட்ட பொறுப்பிலிருந்து ஆரம்பமாகிறது. கொரிந்து சபையில் ஆவியானவர் ஒரு சிலருக்கு வரங்களை கொடுத்து, அது சரீரத்தைக் கட்டி எழுப்பிக் கொண்டிருந்தது. ஆகிலும், சபையின் ஐக்கியமானது தனிப்பட்ட மற்றும் சபையின் நிலையையும் தாண்டிப்போகிறது. ஒவ்வொரு சபையும் ஒரு பொதுவான விசுவாசத்தில், தமக்காக ஜனங்களை மீட்கும்படியாக மரித்த தேவனுடைய கிறிஸ்துவோடு கட்டப் பட்டிருக்கிறது. அப்போஸ்தலன் சபையின் நிலையை ஊடுருவிய சபைக்கும் கிறிஸ்தவர்கள் பங்களித்த தாலந்துக்கும் ஒரு தனித்து வமான கோட்டை வரையவில்லை. அவருடைய பாரமெல்லாம், கிறிஸ்தவர்கள் பங்களிக்கத்தக்க வரங்கள் மற்றும் தாலந்துகளைக் குறித்து இருந்தது. விசுவாசிகள் தங்கள் தாலந்துகளை மற்றும் சபையின் தேவைகளை சரியாக புரிந்துகொண்டால், சின்னஞ்சிறு பொறாமைகளை அவர்கள் கைவிடுவார்கள். மற்றவர்-களுக்கு தேவன் கொடுத்திருக்கும் திறமைகளில் ஒவ்வொருவரும் களி கூருவார்கள், மற்றும் ஒவ்-வொரு தேவன் கொடுத்திருக்கும் தாலந்து கள் மூலமாக தேவனை கனம் பண்ணி மகிமைப்படுத்துவார்கள்.

**வசனம் 27.** ஒவ்வொருவராக, கிறிஸ்தவன், தேவன் அவனுக்கு அல்லது அவளுக்கு கொடுத்-திருக்கும் தாலந்துகளை **கிறிஸ்துவின் சரீரத்தின்** நன்மைக்காக பங்களிக்கிறான். முழு சபைக்காக தனிப்பட்ட அங்கத்தினர்கள், பெற்றுக்கொண்டதை பங்களிக்காமல் ஒரு சரீரம் என்பது இருக்காது. சரீரம் என்பது யாரோ ஒருவரல்ல. சரீரம் என்பது அதனுடைய ஒவ்வொரு அங்கத்தினரும், தனிப்பட்ட முறையில் கருதப்பட்டு, ஒரு குழுவாக இருப்பதுதான். சரீரத்தின் ஒவ்வொரு அங்கமும் என்ன செய்தாலும், அது கிரியை செய்து கொண்டிருக்கிறது ஒரு சபையாக இருக்கிறது. ஒரு கிறிஸ்தவன் வெட்கக்கேடான அல்லது உன்னதமான காரியங்களை செய்யும்போது, அது சபை செய்து கொண்டிருக்கிறது. சரீரத்தில் கிறிஸ்தவர்கள் ஆக்கிரமித்துக் கொள்ளும் இடத்தை அல்லாமல் கிறிஸ்தவம் இல்லை. “கிறிஸ்து, வேண்டும்; சபை வேண்டாம்,” என்று சொல்லும் தனிமைப்படுத்தப்பட்ட விசுவாசிகளைக் குறித்து பவுல் எதையும் தெரிந்திருக்கவில்லை. சரீரத்திற்கு “வேண்டும்” என்று இல்லாமல், கிறிஸ்துவுக்கு “வேண்டும்” என்று இல்லை. சபையை ஒரு படி நிலைமுறை அல்லது ஒரு கட்டிடம் என்று கருதுகிறவர்கள் தவறாக புரிந்து கொண்டுள்ளனர். சபையானது, ஆராதனை செய்யும் மற்றும் பொது நம்பிக்கையில் மற்றும் ஒரு பொது ஜீவிய மார்க்கத்தில் ஒருவரையொருவர் ஊக்குவிக்கும், தேவ

ஜனங்களாக இருக்கிறது.

**வசனம் 28. சபை** என்பதை அவ்வப்போது, கிறிஸ்தவர்களின் உள்ளூரின் கூட்டமாக பயன்படுத்-தினாலும், அது உலகளவிலான விசுவாசிகளின் சமுதாயத்தைக் குறிக்கிறது. சந்தர்ப்பசூழலில் எடுத்துக் கொண்ட, τῇ ἐκκλησίᾳ (*tē ekklēsia*, "சபை")ல், பவுல் பயன்படுத்தின இந்த கட்டுரையானது, வசனபாகத்தில் தொடரும் வரங்களின் பட்டியலின் உலகளவிலான மற்றும் உள்ளூர் உபயோகித்தலை சுட்டிக்காட்டுகிறது. குணப்படுத்தும் வரங்களோடு அப்போஸ்தலமும் ஆவியின் வரமாக நின்றது. **அப்போஸ்தலனின்** அலுவல் அதிகாரத்தை குறிக்கிறது (காண்க மத். 28:16-20); அப்போஸ்தலர், சபையின் எல்லா இடங்களிலும் புத்திமதி மற்றும் வழிமுறைகளை சொல்லவும் செயல்பட்டார்கள். அப்போஸ்தலர் என்பது சபை மூலமாக ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக அனுப்பப்பட்டவர்களைக் குறிக்கும் ஒரு இனத்திற்குரிய வார்த்தையாக இருக்கலாம் (அப். 14:14[16]), ஆனால், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு சாட்சியாக நியமிக்கப்பட்ட பன்னிரண்டு பேர்களுக்கும் பயன்படுத்தப்படலாம். பன்னிரண்டு அப்போஸ்தலருக்கு அதிகாரத்தோடு சேவை கொடுகப்பட்டிருந்தது (மாற்கு 16:14-18). பன்னிரண்டு பெயர்களுக்கு கொடுக்கப்பட்ட அதே சேவை மற்றும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது (1 கொரி. 15:9; கலா. 1:11, 12).

அப்போஸ்தலரோடு கூட **தீர்க்கதரிசிகளும்**, சபைக்கு அதனுடைய போதனைகளிலும் மற்றும் நடவடிக்கைகளிலும் வழிகாட்ட தெய்வீகமான ஏவுதலை பெற்றிருந்தார்கள்; ஆனால், தீர்க்கதரிசிகளுடைய அதிகாரம் அப்போஸ்தலரை விட சிறியதாக இருந்தது. அப்போஸ்தலரின் கூட்டில் கூறும்போது, பட்டியலில் அது இரண்டாவதாக வருகிறது (12:28, 29; எபே. 2:20; 3:5; 4:11). ஒருவேளை, சில சபைகளில், அப்போஸ்தலர் அல்லது தீர்க்க தரிசிகள் இருவரும் இருந்ததில்லை. இந்த அலுவல்களில் ஊழியம் செய்பவர்கள் உலகளவிலான சபைக்கு பிரயோஜனமாக இருக்கும்படி ஆவியானவர் இந்த வரங்களை கொடுத்திருக்கிறார் என்று பவுல் சொல்லிக் கொண்டிருந்தார். தீர்க்கதரிசிகள் சபை அளவில் மட்டுமே செயல் பட்டிருக்கலாம், அல்லது அவர்கள் சபை விட்டு சபைக்கு சென்றிருக்கலாம். அப்போஸ்-தலனின் அல்லது தீர்க்கதரிசியின் அல்லது வேறெந்த பாத்திரத்தின், அலுவலை குறித்து, கிறிஸ்து தாமாகவே தம்முடைய சபையில் ஒரு இடத்தில் வைத்திருக்கும் நபர்களைக் குறித்து பவுல் பேசலாம்; அவர் தம்முடைய ஜனங்களுக்கு அவர்களுடைய பாத்திரத்தைக் "கொடுத்திருக்கிறார்" (எபே. 4:11). அப்போஸ்தலன், புறஜாதியாருக்கு கிறிஸ்துவின் கிரியை மற்றும் ஆவியானவரின் கிரியைக்கு எந்த ஒரு வேறுபாட்டையும் செய்யவில்லை.

ஆவியானவர் பகிர்ந்துகொடுத்த வரங்கள் மூல-மாக, தேவன் சபையில் **போதகர்களையும்** வைத்தார் (எபே. 4:11; காண்க யாக். 3:1). எல்லா சபையிலும் போதகர்கள் மறைமுகமாக இருந்தார்கள். அவர்கள் முற்றிலும் அவசியமானவர்கள், ஆனால் அவர்கள் மூன்றாவதாகப் பட்டியலிடப்பட்டி-ருக்கிறார்கள் ஏனெனில் அதிகார பூர்வமான வழி-காட்டுதலைக் கொடுக்க அவர்கள் ஆவியானவரால் பேறளிக்கப்படவில்லை. அடுத்த இரண்டு வார்த்தை-யில், பவுல் முன்பு பட்டியலிட்டிருந்த ஆவியின் வரங்களுக்கு திருப்பினார். நம்முடைய காலத்தில் சபையில் எழும்பியிருக்கும் கேள்விகள், விசுவாசிகள் அற்புதமாக கொடுக்கப்பட்ட ஆவியின் வரங்களி-லிருந்து, கிறிஸ்தவர்கள் சபை ஊழியத்திற்கு அர்ப்பணிக்க, இயற்கையாகவே இருக்கும் திறமை-களை வேர்பிரிக்க தூண்டப் படுகிறார்கள். பவுலுக்கு அப்பேர்ப்பட்ட வேர்பிரிப்பதில் எந்த ஒரு ஆர்வமும் இருந்ததில்லை. தனிப்பட்ட கிறிஸ்தவர்கள், அவர்-கள் இயற்கை தாலந்தை உபயோகித்தாரோ அல்லது அற்புத வரங்களை உபயோகித்தாரோ, அவர்கள் சரீரத்தில் வித்தியாசமாக செயல்பட்டார்கள். ஒரு சில போதகர்கள், சபையின் சில கடினமான பிரச்சனை-களுக்கு உரையாற்ற அற்புதமான திறமைகளை பெற்றிருக்கலாம், மற்றும் மற்றவர்கள் அப்படியாக இருந்திருக்கலாகாது.

**குணமாக்கும் வரங்களை** கொண்டவர்கள் துணைக்குழுக்களாக இருக்கையில் ஆவியானவர் அற்புத வரங்களை கொடுத்திருந்த கிறிஸ்தவர்கள் - **அற்புதங்களை செய்தவர்கள்** ஒரு விரிந்த வகையில் இருந்தார்கள். 12:28ல் அடுத்த இரண்டு வரங்கள் அற்புதத்திறன் அல்லாததாக குறிப்பிடுகிறது. முதலாவது, **உதவிகளையும்** (ἀντιλήμψεις, *antilēmpseis*; "உதவும்"; NIV), புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே தோன்றுகிறது. இந்த வார்த்தை ஒருவர் மற்றவர்களுக்கு, சரீரத்திற்குள் அல்லது அதற்கு வெளியே, சகாயம் செய்யும் ஊழியத்தை குறிக்கலாம். ஒருவேளை, ஆவியானவர், ஒரு சிலருக்கு கருணையின் கிரியைகள் அல்லது தொண்டு செய்ய ஒரு விசேஷித்த மனநிலையை அல்லது தனிப்பட்ட தருணத்தை கொடுத்திருக்கலாம். அடுத்த வார்த்தை, **ஆளுகைகளை** κυβερνήσεις (*kubernēseis*) என்பதும், புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு முறை மட்டுமே தோன்றுகிறது. கூடுகைக்கு ஒரு இடத்தை அல்லது நேரத்தை தீர்மானிப்பது அல்லது சபை நடக்கும் முறையில் வழிகாட்டுவது போன்ற நடைமுறை விஷயங்களில் தலைமைத் துவத்தை குறிக்கலாம். பவுல் ஏதோ தற்செயலாக, கொரிந்தியர் அதிகமாக பேராசைப்படும் வரத்தை கடைசியாக பட்டியலிடவில்லை. அவர் **பற்பலபாஷைகளைப்** (காண்க 12:10) பேசும் வரத்தை விசேஷ மதிப்போடு கையாளக்கூடாது என்று சுட்டிக் காட்டினார்.

**வசனம் 29.** 12:29, 30 தன்னுடைய கேள்வியை நேர்மறைக்கு μή (*mē*) தொடர்ந்து, பவுல் தான் நேர்மையான பதிலை எதிர் பார்த்ததைச்

சுட்டிக்காட்டினார். கிரேக்க இலக்கணத்தின் வலுவை பிடிக்கும்படி, NASB இவ்வாறாக மொழிபெயர்க்கிறது, **எல்லோரும் அப்போஸ்தலர் அல்ல, அப்படியா?** மற்றும் வேறு கேள்வியில் அதே மாதிரி தொடர்கிறது. பற்பல பாஷைகளாக, அப்போஸ்தல ஊழியமாக, அல்லது குணமாக்கும் வரங்களாக இருந்தாலும், அசாதாரண வரங்களைப் பெற்றிருந்த சக கிறிஸ்தவனை பார்த்து ஒருவரும் பொறாமை கொள்ளக்கூடாது. சபைக்கு சரியான சேவை கிடைக்க, அதனுடைய அங்கத்தினரில், ஒரு சில வகையான வரங்களை எண்ண வேண்டி இருந்தது. ஒவ்வொரு கிறிஸ்தவனில் இருந்த வரங்களில் களிகூரவும் மற்றும் தேவன் அவனுக்கு அல்லது அவளுக்கு கொடுத்திருக்கும் வரங்களில் திருப்தியாக இருக்க வேண்டியிருந்தது. பவுலின் காரியத்தில், அப்போஸ்-தல அலுவல் அவருக்கு சந்தர்ப்பம் ஏற்படும்போது, அந்த வரங்களை உபயோகிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கலாம் (1 கொரி. 14:18; 2 கொரி. 12:12). அப்போஸ்தலன் கொரிந்தியர் எப்படி இருக்கும்-படி எதிர்ப்பர்த்தாரோ, அப்படியாகவே அவர் ஒரு மாதிரியாக இருந்தார். அவர் என்ன வரங்கள் பெற்றிருந்தாலும், கிறிஸ்துவின் சரீரத்தின் பிரயோஜனத்திற்காக அவருடைய திறமைகளைச் செயல்-படுத்தினார் என்று அவர் எளிதாகச் சொன்னார்.

**வசனம் 30.** ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு நேர்மறையான பதிலை எதிர்பார்த்தபடி, சொல்லாட்-சியின் கேள்விகளின் தொடர் முன்னேறுகிறது. எல்லோருக்கும் ஒரே வரம் இல்லை என்பது நிச்சயமே; அப்படியாக இருந்திருந்தால் சபையானது ஒரு பெலவீனப்பட்ட சரீரமாக இருக்கும். சரீரத்தின் அங்கத்தினர் ஒருவரை ஒருவர் சார்ந்திருக்கிறார்கள். முழு சரீரத்தின் ஆசீர்வாதத்திற்காக சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் அனுபவித்திருந்த வரங்களை குறித்து கிறிஸ்தவர்கள் களிகூர வேண்டும். வரம் எதுவாக இருந்தாலும் (பற்பல பாஷைகளைப் பேசுவது, குணமாக்குதல், ஊழியங்கள், அல்லது ஆளுகைகள்), ஒருவரும் மற்றவர்களை எரிச்சலோடு அல்லது பொறாமையோடு பார்க்க அதிகாரம் இல்லை. மற்றவர்களுக்கு இருந்த வரங்கள் தனக்கு இல்லையே என்று ஒருவரும் தன்னை பின்தங்கினவராக நினைக்கக்கூடாது. எல்லா கிறிஸ்தவர்களும், குணமாக்க அல்லது வேறு அற்புதங்களைச் செய்ய முடியாதது போல, எல்லோரும் பாஷைகளை பேசவில்லை. 12:10ன் படி, பவுல் பாஷைகளைப் பேசும்போது, அதைத் தொடர்ந்து வியாக்கியானம் வரும் என்ற எதிர்ப்பார்ப்பை கவனித்துக் கொண்டே பேசினான் 14. அதிகாரத்தில் வியாக்கியானத்தின் கருத்திற்கு அவர் திரும்புவார்.

**வசனம் 31.** 12:31ல் அதிகாரத்தின் நடுவில் இயற்கையாகவே பிரிவு வருகிறது. பவுல் சொன்னது, **முக்கியமான வரங்களை நாடுங்கள்**; பரிசுத்த ஆவியானவர் கொடுக்கும் வரங்களுக்காக

ஏங்குவது பாராட்டக்கூடியது. முதல் பார்வையில், ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது என்று 12:7-11ல் அவர் சொன்ன பிறகு, பவுல் சபைக்கு ஆவியின் வரங்களை நாடும்படி சொல்லுவது விசித்திரமாக தோன்றுகிறது. ஒருவேளை, வரங்களை நாடினவர்களுக்கு அது பிரயோஜனமாக இருப்பதை ஆவியானவர் கொடுத்தார் என்று கொரிந்தியர் புரிந்து கொண்டிருக்கலாம். சபையில் சேவை செய்வதற்காக, குறிப்பிட்ட வரத்தை மனமார விரும்பும் கிறிஸ்தவன் ஆவியானவர் அவனுக்கு அந்த வரத்தை விரும்பி அளிப்பதைக் காணலாம். இந்த வரங்களை சர்ச்சித்த பிறகு, பவுல் தம்முடைய வாசகர்களை, இன்னும் சரியான ஐக்கியத்தில் இருக்கும்படி, **அதிக மேன்மையான வழியில்** நடத்தினார்.

கிறிஸ்தவர்கள் சகோதர அன்பின் அடிப்படையில் வரங்களை நாட வேண்டும் என்பது பவுலின் கரிசனையாக இருந்தது. அவருடைய எண்ணத்தின்-படி, கொரிந்தியர், தேவனுடைய எல்லா வரங்களைக் காட்டிலும், அதி முக்கியமான ஒன்றை, அன்பின் வரத்தைப், புறம்பே தள்ளி கொண்டிருந்தார்கள் (8:1; 16:14). பவுல் அவர்களுக்கு முன்பாக எல்லோரும் பெறக்கூடிய வரத்தை தெரிவிக்க விரும்பினார். தேவனுடைய பார்வையில், கொரிந்தியர் நாடின காணப்படுகிற எல்லாவற்றை காட்டிலும் மிக சிறந்த வரமாக இருந்தது.

## நடைமுறை பயன்பாடு

### "அங்கு பார் கிறிஸ்துவின் சபை செல்கிறது"

ஏழ்மையான சுற்றுபுறத்தில் ஒரு சிறிய அடுக்குமாடியில் ஒரு வயதான ஸ்திரீயை சந்தித்ததைக் குறித்து ஒரு பிரசங்கியார் சொன்னார். அந்த முதியோர் முடமாக இருந்தார்கள். ஒரு நண்பர் அவர்களுக்கு மளிகை சாமான்களைக் கொண்டு வந்தார்கள். அவர்கள் என்றும் அவர் வசித்த கட்டிடத்தின் வெளியே போகவே இல்லை. அந்த ஸ்திரீயோடு சில நேரங்கள் பேசியதாக, அவர்களுடைய வியாதிகளை மற்றும் தனிமையை விவரிக்கச் சொல்லி, அவருடைய கடிகாரத்தில் ஒரு கண் வைத்திருந்தார் என்று பிரசங்கியார் சொன்னார். நிமிட முள்ளானது ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்தபோது, அவர் விடைபெற்றார். அவர் அந்த முதியோரை வந்து சந்தித்ததற்காக அவர்கள் நன்றியால் பூரித்தார்கள். தன்னுடைய கடமையை செய்து விட்டதற்காக அவர் சந்தோஷ பட்டார் - ஆனால், அவர் கதை தொடர்ந்தது.

அவருடைய காரை நோக்கி நடக்கையில், வீதியில் விளையாடிக் கொண்டிருந்த ஒரு சில பிள்ளைகளை அவர் கடந்து போனார். அதில்

ஒரு சிறுவன் தெரிந்தவனாக தோன்றினான்; ஒரு அத்தையோடு அவன் ஆராதனையில் கலந்து கொண்டிருந்தான். பிரசங்கியார் கடந்து போகையில், அவர், தன்னை அடையாளம் கண்டுபிடித்து, தன் நண்பனுக்கு விவரிக்கும் அந்த சிறுவனோட சத்தத்தை கேட்டார், "அங்கு பார் கிறிஸ்துவின் சபை சொல்கிறது." அவருடைய கால்கள் நின்றதை உணர்ந்தார், அண்மையில் அவர் நிற்கவில்லை. "அவர் கிறிஸ்துவின் சபை" அல்ல என்று அந்த சிறுவனுக்கு அவசியம் விவரிக்க வேண்டும் என்று நினைத்தார். தான் விவரித்தால், சிறுவனோ அல்லது அவனுடைய நன்பனோ அதை புரிந்து கொள்ளுவார்கள் என்று அவர் நினைக்கவில்லை.

ஆகிலும், அந்த சொற்றொடர் அவர் மனதை விட்டு போகவில்லை. வெகுளிகள் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் செய்வது போலவே, அது அவர் மூளையிலேயே இருந்தது. பிரசங்கியார் தன்னையே கேள்விக் கேட்டு கொண்டார், அவர் "கிறிஸ்துவின் சபை"யாக இல்லாமலிருந்தால், அது யாராக இருக்கும்? சபை வாக்களித்திருந்தால், அவருடைய அந்த முதி யோரின் விரிசலான அடக்குமாடி வீட்டில் தன்னுடைய சந்திப்பு, கிறிஸ்துவின் வேலையாக இருக்குமா? அவருடைய சந்திப்பிற்கு மூப்பர்களின் அனுமதி தேவையாக இருந்ததா? முழு சபையும் அந்த ஸ்திரீயின் படுக்கையில் வந்து அமர்ந்திருந்தால், அது சபை கிரியையில் இருப்பதாக இருந்திருக்குமா? "அங்கு பார் கிறிஸ்துவின் சபை செல்கிறது," என்று அந்த சிறுவன் சரியாகத்தான் சொன்னான்.

பிரசங்கியாரின் மனது அந்த சிறுவனின் அறிக்கையை நோக்கி பார்க்க தொடர்ந்தது. சிறுவன் அவரைப் பார்த்தபோது அவர் பல்வேறு காரியங்களைச் செய்துக் கொண்டிருக்கலாம். அந்த சிறுவன் மற்றும் அவனுடைய நண்பன், தேவையில்லாத ஒரு கட்டுரையைப் படித்துக் கொண்டிருந்த ஒரு மனிதனைப் பார்த்து, "அங்கு பார் கிறிஸ்துவின் சபை செல்கிறது," என்று சொல்லவில்லை. மதுபானம் வாடையடிக்கும் ஒரு மனிதன் என்று அந்த சிறுவர்கள் சொல்லாததற்காக அவர் நன்றியறிவுள்ள வரானார். பிரசங்கியார், காதல் எண்ணத்தோடு, ஒரு அழகான இளம் ஸ்திரீயைப் பார்க்கச் செல்லும் அல்லது அந்த முதியோரின் பழைய அடுக்கு மாடிக்குள் களவு செய்வதற்காகவோ அல்லது அவளைப் பயன்படுத்திக் கொள்ளும்படிப் போவதை அந்த சிறுவர் பார்க்கவில்லை. தன்னுடைய இலாபத்திற்காக பொய் பேசும் ஒரு சபையின் பிரதிநிதியை அவர்கள் பார்க்கவில்லை.

இந்த நாளிலே, ஒரு சிறுவன் சுட்டிக்காட்டி, "அங்கு பார் கிறிஸ்துவின் சபை செல்கிறது," என்று சொன்னபோது, அவன் தன் நண்பனுக்கு ஒரு தனிமையான, கைவிடப்பட கிறிஸ்தவ ஸ்திரீயைப் பார்க்கச் சென்றதைக் காட்டினான். இந்த முத்திரைகுத்தும் பிள்ளைகள், அவர் அந்த ஸ்திரீயின் சிறைப்பட்ட வாழ்க்கைக்கு சிறிது களிப்பை

கொடுக்க முயற்சிப்பதை கவனித்தார்கள். பவுலின் வார்த்தைகள் அவர் நினைவுக்கு வந்தது: “எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவே யிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்” (12:12); “நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங் களாயுமிருக்கிறீர்கள்” (12:27). பிரசங்கியார் தனக்கு தானே சிரித்துக் கொண்டார். உண்மையாகவே, அந்த நாளில் அவர் கிறிஸ்துவின் பிரநிதியாக இருந்தார். நல்லதற்கோ கெட்டதற்கோ, நம்முடைய நடத்தை எப்பொழுதுமே கிறிஸ்துவின் சபையின் நடத்தையாக இருக்கிறது.

### விசுவாசிகள் கூட்டம்

கோட்பாட்டில், ஒரு நபர் தனிமையான தீவில் அகப்பட்டிருக்கலாம் மற்றும் எல்லா மனிதர்களை விட்டு வேறுபட்டு தேவனை ஆராதித்துக் கொண்டிருக்கலாம். அப்பேர்பட்ட சூழ்நிலை சாத்தியமானது ஆனால், கூடாததாய் இருக்கிறது? *வேதாகமம் முழுவதிலும், தேவனின் ஆராதனை ஒரு சமுதாய வட்டத்திற்குள் நடந்தது. ஆபிரகாம் மற்றும் அவன் சந்ததி குடும்ப அலகுகளில் தேவனை சேவித்தது*. குடும்பத்தில் ஒரு அங்கத்தினர் சொன்னது முழுவதற்கும் ஆதாயமாக அல்லது நஷ்டமாக கிரியை செய்தது லோத்து ஆபிரகாமைப் பிரிந்து, நீர்வளம் பொருந்தினதாயிருந்த யோர்தானை தேர்ந்தெடுத்தபோது (ஆதி. 13:10), அதனுடைய விளைவு பேரழிவாக இருந்தது. கோத்திர தலைவனின் குடும்ப மற்றும் சமுதாய உணர்வானது அவனுடைய 318 ஆட்களை அணிதிரட்டி படையெடுக்கும் அரசர்களிலிருந்து தன்னுடைய அண்ணனின் மகனைக் காப்பாற்ற வேண்டி இருந்தது (ஆதி. 14:14). இஸ்ரவேல் தேசமானது, கோத்திர தலைவர்களின் சமுதாயமாக இருண்டது. 1 கொரிந்தியர் 12ல் பவுலின் புத்திமதியானது வேதாகமம் முழுவதிலும் ஓடும் தலைப்பின் விரிவாக்கமாக இருந்தது. தேவனுடைய ஜனங்கள் வாழ்ந்து, ஆராதித்து, ஒரு சமுதாயமாக, ஒருவருக்காக ஒருவர் அக்கறை கொள்கிறார்கள்.

மனித உடலின் ஒப்புமை, சமுதாயத்தின் கருத்தை நன்றாக விவரிக்கிறது. ஜனங்கள் எல்லோருடைய செழிப்பை மேற்கொண்டு முன்னேற்றுவதற்காக ஒரு கிராமம், பட்டணம், மாகாணங்கள், இராஜ்ஜியம், மற்றும் தேசத்தை உருவாக்குகிறார்கள். ஒருவன் அவனுடைய அல்லது அவளுடைய சொந்த பங்கை முழு சரீரத்திற்காக பங்களிக்கிறான் என்ற உதாரணம் கொடுக்கும்படி, சரீரத்தின் பன்முகத்தில் ஒற்றுமை என்ற திட்டத்தை கொண்டுவர பவுல் தான் முதல் மனிதர் அல்ல. தத்துவஞானிகள் மற்றும் பேச்சாளர்-கள், அவ்வப்போது இந்த ஒப்புவுமையை உபயோகித்த-தினாலே கிரேக்க-

ரோம உலகத்தில் இது பொது உதாரணமாக மாறினது. சபை கூடுகை அளவில் இந்த ஒற்றுமை விசேஷமாக மிக சரியானதாக இருக்கிறது, ஏன் என்று இங்குள்ளது.

*கிறிஸ்து "உலகமெங்கும் போய், ... சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்" தம்முடைய கட்டளையை, சபைக்கு ஒட்டு மொத்தமாக மற்றும் கிறிஸ்தவர்களுக்கு தனித்தனியாகக் கொடுத்தார்* (மாற்கு 16:15). தேவன் இந்தப் பணியை தெரிந்து கொள்ளபட்ட ஒரு சில பிரசங்கியாருக்கோ, ஆசாரியர்களுக்கோ அல்லது தலைவர்களுக்கோ கொடுக்கவில்லை.

ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனுக்கும், தேவன் தம்முடைய ஜனங்களுக்கு கொடுத்திருக்கும் சேவைக்கு பங்களிக்கும் திறமைகள் அல்லது தாலந்துகள் இருக்கிறது. பலவகையில், ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவன் தனக்கு அல்லது மற்றவர்-களுக்கு கொடுத்திருக்கும் திறமைகளை புகழ்ந்து களிகூருகிறான். அவனுடைய அல்லது அவளுடைய பங்கை நிறைவேற்ற மற்றவனை சார்ந்தி ருக்கிறான். பலவேறு வரங்களைக் கொண்டவர்கள் விசேஷமாக ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், ஆனால், தேவன் கொடுத்தி-ருக்கும் தாலந்துகளை ஒவ்வொருவனும் பயன்படுத்த வேண்டும். சுரண்டல்களும் பொறாமையும் கிறிஸ்-துவின் சரீரத்தைப் பாழாக்குகிறதாக இருக்கிறது.

*அநேக பாகங்களை கொண்ட, சரீரம் ஒரு ஒருங்கிணைந்த முழுமையாக இருக்கிறது.* ஒரு அங்கத்தினர் கனம்பெற்றால், சரீரம் அந்த ஆசீர்வாதத்தில் பங்குபெறுகிறது. ஒரு அங்கத்தினர் தன் கடமையை விட்டுத் தவறினால், ஒரு கிறிஸ்தவன் பாவத்தில் மரித்தால், முழு சரீரமும் பாதிப்புக்குள்ளாகிறது.

கிறிஸ்தவ ஜீவியத்தில், சரீரத்தின் ஒரு அங்கமாக இருக்கிறது கட்டாயமற்றதல்ல. சரீரம் சமுதாய வாழ்வில் ஒரு ஒற்றுமை காக்கவேண்டும் என்றால், சபை கூடுவது மிக முக்கியமானதாக இருக்கிறது. கிறிஸ்தவனாக மாறுவது என்றால் இயேசுவை தன் இதயத்தில் ஏற்றுக் கொள்ளுவதற்கும் அதிகமானது உட்பட்டிருக்கிறது. தேவனை விசுவாசிக்க, தன் பாவத்திற்கு பட்சாதாபம் பட, இயேசுவை தேவ குமாரனாக அறிக்கை செய்ய, மற்றும் ஞானஸ்நானம் பெற தெய்வீக கட்டளையை அவன் கைக்கொள்ள வேண்டும். இந்த வகையில், அவன் தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கமாக மாறுகிறான். கிறிஸ்தவனாக வாழுவது என்பது இயேசு மற்றும் அவருடைய நாமத்தை அறிக்கை செய்பவர்கள் இடையே இருக்கும் விஷயம் மட்டும் இல்லை. அது ஊக்குவிப்பது, ஆதரிப்பது, சமுதாயத்தை விட்டு வெளியேறுபவர்களுக்காக வேதனைப்படுவது மற்றும் சீர்திருத்துவது, இவையெல்லாம் உட்பட்டிருக்கிறது. அனேக கிறிஸ்தவர்கள் தாங்கள் புறக்கணிக்கப் படும் போது வேறு சக

விசுவாசிகள் மீது பழிபோடுவார்கள், ஆனாலும் உதவி வேண்டியவர்களுக்கு ஆதரவை தருபவர்களுக்கு அவர்கள் நிதானத்தோடு இருப்பார்கள்.

---

குறிப்புகள்

[1]11:3-16ல் முக்காடிடுவதைபற்றி விவரித்துள்ளது குறிப்பாக கூடிவந்த சபைக்கு பொருந்தாது. [2]கொரிந்துவிலுள்ள சபைக்கு எழுதிய கடிதத்தில், "பொறாமை, சண்டை மற்றும் கலகமும், ராஜதுரோகமும்" ஆகியவை பற்றி Clement கவலை தெரிவித்தார் (Clement of Rome *First Clement* 3:2). [3]மொழியியலாளர்கள் ஒரு சொல்லை அதன் "சொற்பொருள் களம்" என்று குறிப்பிடுகின்ற முழு அளவையும் பற்றி பேசுகின்றனர். [4]இந்த வார்த்தையின் ஒரு சிறந்த கலந்துரையாடல். D. A. Carson கொடுக்கப்பட்டுள்ளது. (D. A. Carson, *Showing the Spirit: A Theological Exposition of 1 Corinthians 12—14* [Grand Rapids, Mich.: Baker Book House, 1987], 19-22.) [5]Jack Cottrell, *Power from on High: What the Bible Says About the Holy Spirit* (Joplin, Mo.: College Press Publishing Co., 2007), 411. [6]James Greenbury, "1 Corinthians 14:34-35: Evaluation of Prophecy Revisited," *Journal of the Evangelical Theological Society* 51 (December 2008): 724. [7]அப்போஸ்தலர் 2ல் "அந்நிய பாஷை" கொரிந்தியரில் இருந்ததைவிட வித்தியாசமான விஷயம் என்று Leon Morris வாதிட்டார். அவரது கருத்தை பல வர்ணனையாளர்களிடமும் ஒப்பிடலாம். (Leon Morris, *The First Epistle of Paul to the Corinthians*, rev. ed., The Tyndale New Testament Commentaries [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985], 169.) [8]David E. Garland, *1 Corinthians*, Baker Exegetical Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Baker Academic, 2003), 584. [9]Robert H. Gundry, "'Ecstatic Utterance' (N.E.B.)?" *Journal for Theological Studies* 17 (1966): 299-307. [10]Jerome Murphy-O'Connor, *St. Paul's Corinth: Texts and Archaeology*, 3rd rev. and exp. ed. (Collegeville, Minn.: Liturgical Press, 2002), 191.

[11]Cottrell, 308-9. [12]Livy *Historia* 2.32. [13]Epictetus *Discourses* 2.5.25-26. [14]Morris, 173. [15]Thomas Campbell, *Declaration and Address* (St. Louis: Mission Messenger, 1978). This document can be viewed online இந்த ஆவணம் ஆன்லைனில் பார்க்க முடியும் (accessed September 25, 2015, http://www.therestorationmovement.com/_states/wv/declaration.htm#4). Campbell (1763-1854) 1809 இல் உரையாற்றினார். [16]அதே வார்த்தை 2 கொரிந்தியர் 8:23ல் ("ஸ்தானாபதிகளும்") "தூதுவர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.